பொதுசன நூலகம்
1 MAR 2005

Registered as a NewsPaper
விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்
க்கங்கள்-12
நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-17 01-03-2005 செவ்வாய்க்கிழமை ஓசை -11

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247 (சி-1452)

- புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட -

# மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் உட்பட

# மூன்று போராளிகள் மீது துப்பாக்கிச் சூடு!

## சூடு நடத்தியவர் விசேட அதிரடிப்படையின் முன்னரங்க நிலையைத் தாண்டிச் சென்றார்

(மட்டக்களப்பு)

**விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் வெனி உட்பட மூன்று பெண் போராளிகள் அம்பாறை மாவட்டம் தம்பட்டையில் நடத்தப்பட்ட பாக்கிச் சூட்டில் காயமடைந்தனர். இவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர் அருகிலிருந்த சேட திரடிப்படையின் முன்னரங்க நிலையைக் கடந்து வந்து துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு ன்னர் அதே முன்னரங்க நிலையைக் கடந்து சென்றார்.**

நேற்று மாலை 6.30 மணியளவில் அம்பாறை வட்டம் அக்கரைப்பற்று பொத்துவில் வீதி தம்பட் யில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் காய டந்த ஏனைய போராளிகள் மட்டு-அம்பாறை ளிர் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் மதி மற்றும் அகநிலா எனத் தெரிவிக்கப்படு றது. நேற்று மட்டக்களப்பு மாவட்டம் பன்சேனை நடைபெற்ற தியாகி திலீபன் மருத்துவமனைத் ப்பு விழாவில் கலந்து கொண்ட பின்பு திருக் விலிலுள்ள அரசியல் துறைப் பணிமனைக்கு மூவரும் தனியார் ஆட்டோ ஒன்றில் திரும் கொண்டிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவம் இடம் பெற்ற இடத்தில் உந்துருளி யுடன் காணப்பட்ட நபரொருவர் இவர்கள் பயணம் செய்த ஆட்டோவை வழி மறித்து நிறுத்தி விட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளார்.



அக்கரைப்பற்று-திருக்கோவில் வீதியின் இரு முனையிலும் காவற் கடமையிலுள்ள விசேட அதிரடிப்படையினர், தங்களைக் கடந்து செல்லும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.ரயில் நிலையச் சந்தியில் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிற்கு வெளியே புகையிரத நிலையச் சந்திக்கு அண்மையில் நேற்றிரவு 8.30 மணியளவில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சுப்பிரமணியம் தயாநிதி எனப்படும் இந்நபர் புகையிரத நிலைய வீதியில் உந்துளியில் சென்று கொண்டிருக்கையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவருக்கு நெஞ்சில் துப்பாக்கிச் சூடு விழுந்துள்ள நிலையில் ஆபத்தான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. நபர் ஏற்கனவே நாகபடை, ரெலோ, ஈ.பி.ஆர்..எல்.எப்., பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப். ராசிக் குழு ஊடாக சிறிலங்கா இராணுவ சேவை எனப் பல்வேறு அமைப்புகளில் இருந்து பல குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டிருந்தவர் எனக் கூறப்படுகின்றது.




## வடமராட்சி கிழக்கில் வடகு உற்பத்தி மையம் திறப்பு

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக் ளின் வாழ்வாதாரங்களை மீளக் கட்டியெழுப்பும் க்கில் சுனாமிக்குப் பின்னரான துரித புனர் வாழ்வு அபிவிருத்திச்சேவை நிகழ்ச்சித் திட்டத் ன தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வடக்குக் க்குப் பிரதேசங்கள் எங்கும் ஒருங்கிணைத்து னெடுத்துவருகின்றது. இத்திட்டத்தின் கீழ் *நம்பிக்கை ஒளி, மீண்டும் தொழிலுக்குச் செல்லுதல், இணைந்து செயற்படுதல்* என செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றுள் வருமானம்சார், பொருளாதார மேம்பாடுசார் செயற்றிட்டங்கள் உள்ளடக்கப்பட்ட "மீண்டும

(12ஆம் பக்கம் பார்க்க)



## பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் மட்டக்களப்பிற்கு நேற்று விஜயம்!

ஆறு மணித்தியால இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இளவரசர் சார்ள்ஸ் அங்கிருந்து விசேட உலங்குவானூர்தி மூலம் மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கைச் சென்றடைந்தார். இவரை அரசாங்க அதிபர் வேல் முருகு சண்முகம், உட்பட அதிகாரிகள் வரவேற்றனர். வெபர் மைதானத்திலிருந்து வாகனத் தொடரணியாக நாவலடி, திருச்செந்தூர் மற்றும் டச்பார் ஆகிய இடங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்ட இளவரசரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட கிளைத்தலைவர் ரி.வசந்தராஜா மாலை சூட்டி வரவேற்றார். அதனைத்தொடர்ந்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாட்டிலும் இவர் கலந்து கொண்டார். இதன் பின்னர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டதோடு அங்கு இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க குழுவின் தொண்டர்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் அரசைக் கண்டித்து நாளை பெரும் பேரணிக்கு ஏற்பாடு!

யாழ் குடாநாட்டில் மாபெரும் ண்டனப் பேரணியொன்றை நடாத் வதற்கான ஏற்பாடுகள் நடை ற்று வருகின்றன.

சுனாமி கடல் பேரலையி ல் பாதிக்கப்பட்ட வடக்குக் ரயோர மக்களுக்கான உத திட்டங்களை இழுத்தடிப்புச் செய்வதைக் கண்டித்தும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்களைக் கண்டித்தும், இடைக்கால நிர்வாகத்தினை வழங்க மறுப்பதைக் கண்டித்தும் நாளைய தினம் இக் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது வெகுசன அமைப்புக்கள், கூட்டுறவு அமைப்புக்கள், தொழிலாளர் அமைப்புக்கள் மற்றும் கல்விச் சமூகம் என்பன இணைந்து நடாத்தவுள்ள இப்பேரணி யாழ் குடாநட்டில் மாபெரும் எழுச்சியாக நடைபெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(27)

## மூன்று சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு சனாதிபதி சந்திரிகா சேவை நீடிப்பு வழுங்கல்

சிறிலங்கா இராணுவத்தில் மூன்று சிரேஷ்ட அதிகாரிகளுக்கு முப்படைத் தளபதி என்ற ரீதியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சேவை நீடிப்பு வழங்கியுள்ளார். இராணுவப் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, துணைப் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, தொண்டர் படைப் பிரிவுத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராச்சி ஆகியோருக்கே இந்த சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. இராணுவத்திலிருந்து சிரேஷ்ட அதிகாரிகள் ஓய்வு பெறுவது இராணுவ சேவைக்குப் பாதிப்பாக அமையும் என்பதால் அதனைக் கருத்திற் கொண்டே சனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

# கிளி/தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்-கிளிநொச்சி மாவட்டம்

## பதவி வெற்றிடம்:-

கிளி/ தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் பின்வரும் பதவி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மரவேலைப் பயிற்சி நெறி (Wood work)
2. மேசன் பயிற்சி நெறி (Masonry)
3. நீர்க்குழாய் பொருத்தல் பயிற்சி நெறி (Plumbing)
4. மின்னொட்டு பயிற்சி நெறி (Welding)

கல்வித் தகைமை:- உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வழங்கப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
அத்துடன்
உரிய துறையில் மேலதிக பயிற்சிகள் பெற்றிருத்தல் வேண்டும்.
அத்துடன்
ஒரு வருடத்திற்கு குறையாத கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமையுடையோர் எதிர்வரும் 10/ 03/ 2005 க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

முகவரி:-
அதிபர்,
தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி.11520)

# அரசாங்க அறிவித்தல்
# யாழ்.மாவட்ட செயலகம்
# அலுவலக உபகரணங்கள் வழங்குவதற்கான கேள்வி

யாழ்.மாவட்ட செயலக மற்றும் பிரதேசசெயலகங்களுக்குத் தேவையான பின்வரும் பொருட்களை வழங்குவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவத்தினையும், பொருட்கள் தொடர்பான விபரத்தையும், நிபந்தனைகளையும் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 4.45 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு, மேலுறையின் இடப்பக்க மேல் மூலையில் அலுவலக உபகரணங்கள் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் என குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப் பெட்டியிலோ 2005.03.29 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்பட வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விப் பத்திர பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமூகமளிக்கலாம்.

01. உருக்கு அலுமாரி
02. உருக்குக் கோவை அலுமாரி
03. உருக்கு பதவி நிலை உத்தியோகத்தர் மேசை
04. உருக்கு எழுதுநர் மேசை
05. பிளாஸ்ரிக் கதிரை (Arpico)
06. மர கைபிடிக் கதிரை (முதிரை)
07. பக்ஸ் இயந்திரம் (Canon)
08. கிராம அலுவலர்களுக்கான பெயர் பலகை செய்தல் (எழுதுதல் உட்பட)
09. கணணிப் பதிகருவி (Epson LQ)
10. கிராம அலுவலர்கள் அறிவிப்புப் பலகை
(மாதிரிகளை களஞ்சிய நலன்புரிக்கிளையிடம் பெற்றுக் கொள்ளலாம்)

கே.கணேஸ்,
அரசாங்க அதிபரும், மாவட்டசெயலாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி.11371)

# சாரதி பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்கம் முல்லைத் தீவு சாரதி பதவிக்கான விண்ணப்பம் கோரல்

1.சம்பள குறியீட்டு இலக்கம் 312/15

2.சம்பள அளவுத்திட்டம் (3500+1250) 4750-65x10-70x10 =6100/=

3.வயதெல்லை :- 21-45

தகைமைகள் :- எட்டாம் வகுப்பு

கல்விச் சான்றிதழ்களுடன் பஸ் அல்லது லொறி அல்லது நான்கு சில்லு உழவு இயந்திரம் பெட்டியுடனான சாரதி அனுமதிப்பத்திரத்துடன் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் மேற்குறித்த பதவிக்காக விண்ணப்பிப்போர் 10.03.2005 இற்குமுன்பு கிடைக்கக் கூடியதாக தபால் மூலமாகவோ, நேரடியாகவோ தலைவர் கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம், முல்லைத்தீவு. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
கரைதுறைப்பற்று
ப.நோ.கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

(சி-11368)

# தேடுகின்றோம்

## திரு.சண்முகம்

வாழைத்தோட்டம்,முகாவில் வீதி, இயக்கச்சி.என்னும் இடத்தில் அமைந்துள்ள அம்மன் ஆலயத்திற்குப் பூசை செய்து வந்த திரு.சண்முகம் என்பவரைத் தேடுகின்றோம். அவர் எங்கிருந்தாலும் உடன் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக இயக்குனர்,
புறமோட்டோர்ஸ் என்ஜினியரிங்,
கம்பனி லிமிட்டட்,
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தொ.இல:222 5780

(சி.11370)





கிளிநொச்சி அம்மன் களஞ்சியத்தால் நடாத்தப்பட்ட நெஸ்பிறே பரிசுப்போட்டியின் நான்காவது அதிஸ்டசாலி நேற்று திங்கட்கிழமை தெரிவுசெய்யப்பட்டார்.

அதிஸ்டசாலியின் பெயர் விபரம்
செல்வராசா நிரோசன்
2ஆம் கட்டை,
கோரக்கன்கட்டு.

பரிசுக்குரியவர் கிளிநொச்சி அம்மன் களஞ்சியத்தில் நேரில் வந்து உரிய ஆவணங்களை உறுதிப்படுத்தி தனது ஏசியா ஈருருளியினைப் பெற்றுக்கொள்ளவும்.

(சி-11266)

## தினமும் நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

வடபகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்

## அம்மன் களஞ்சியம்

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077



நெஸ்பிறே பரிசுப்போட்டியின் நான்காவது அதிஸ்டசாலி சிறுமி ஒருவரால் தெரிவுசெய்யப்படுவதை படத்தில் காணலாம்.


# சேவையின் சிகரத்திற்கு சிரம் தாழ்ந்த வாழ்த்துக்கள்

எமது மாவட்டத்தில் கல்விப்பணிக்காக
முப்பது ஆண்டுகளாக
நல்லாசானாய், பள்ளி முதல்வராய் துணைநிலைகளில் பணிப்பாளராய்
வலயத்தின் பணிப்பாளராய்
சமூகப் பணியாளராய்
வேகமும் விவேகமும் இணைந்த
நல் நண்பனாய்
சேவையாற்றி முல்லை மண்ணில் கடமையாற்ற
கால் பதிக்கும்
"உயர் திரு. பசுபதி அரியரத்தினம்"
பெருந்தகையை பாராட்டி
வாழ்த்துவதில் நிறைவடைகின்றோம்.



கிளிநொச்சி மாவட்ட
கல்வி மேம்பாட்டுப்பேரவை
கிளிநொச்சி.

(சி-11532)

தென்மராட்சிப் பிரதேசத்தில்

# இராணுவத்தால் வீடிழந்தோருக்கான வீடமைப்புத் திட்டங்கள் மந்தகதியில்!

(தென்மராட்சி)

**யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக தமது வீடுகளை இழந்த தென் மராட்சி பிரதேச மக்களுக்கான வீடமைப் புத்திட்டங்கள் மந்தகதியில் இடம் பெற்று வருகின்றன.**

பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களாலும் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் வீடமைப்புத்திட்டங்கள் யாவும் மந்தகதியிலேயே நகர்வதாக பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப்பிரதேச மக்களுக்கான இத்திட்ட அமுலாக்கல் நடவடிக்கைகள் கடந்த 2004 ஆம் ஆண்டு முற்பகுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டாலும் திட்டநகர்வுகள் மந்தகதியிலேயே இடம் பெறுகின்றன.

இதனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற் கொண்டு வந்த வீடமைப்பு நடவடிக்கைகள் இடை நடுவிலேயே உள்ளன. (33)

## யாழ். இல் பட்டப்பகலில் வீடுடைத்துத் திருட்டு

(கொழும்புத்துறை)

யாழ். கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் உள்ள தனியார் வீடொன்று பட்டப்பகலில் உடைத்துக் களவாடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவம் குறித்து பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான உடமைகள் களவாடப்பட்டிருப்பதாகவும் மேற்படி வீட்டில் ஆளில்லாத சமயம் பார்த்தே இத்திருட்டு இடம் பெற்றிருப்பதாகவும் தெரியவருகிறது (33)

## ஆவரங்காலில் மாட்டுவண்டிச் சவாரி

வன்னி மற்றும் யாழ் மாவட்டப் பகுதிகளைச் சேர்ந்த காளைகள் போட்டியிடும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆவரங்கால் சவாரித்திடலில் நடை பெறவுள்ளது.

ஆவரங்கால் மற்றும் அச்சுவேலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சவாரிப் பிரியர்களால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (33)

## பொலிசார் கண்ணில் மண்தூவி திருட்டுக்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில். கோண்டாவில், கொக்குவில், உரும்பிராய், தாவடி போன்ற பகுதிகளில் அண்மைக்காலமாக திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இரவு நேரக்கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறிலங்கா பொலிசாரது கண்களில் மண்ணைத் தூவி விட்டு திருட்டுக் கும்பல்கள் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றன.

இதனால் இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவுகின்றது. (33)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை புனரமைக்க சுவீடன் அரசு உதவி

(வடமராட்சி)

யாழ். வடமராட்சியில் சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்ப தற்கான உதவிகளை வழங்க சுவீடன் அரசு முன்வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பிரதேச மாண வர்களின் கல்வி மேம்பாடுகளைக் கவனத்தில் கொண்டே இவ்உதவி களை வழங்க முன் வந்திருக்கிறது.

இதனடிப்படையில் வடமராட்சிப் பகுதி கடற்கரையோரங்களி லிருந்து 100 மீற்றர் தூரத்திற்குட் பட்ட பகுதிகளில் இருக்கும் பாடசாலைகளை இடம் நகர்த்தி பாதுகாப்பான இடங்களில் நிறுவுவது குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளது. (33)

## யாழ்.பொலிஸ் நிலையமருகில் கழிவு வாய்க்கால் துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத்தினை அண்டியுள்ள கழிவுநீர் வாய்க்கால் உரிய முறையில் சுத்தம் செய்யப் படாததினால் அது துர்நாற்றம் வீசுகிறது.

நீண்டகாலமாகச் சுத்தம் செய்யப்படாததினால் இவ் வாய்க் காலில் சகதிகள் பெருமளவில் தேங்கியே இவ்வாறு துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அப்பகுதி யூடாகப்பயணிப்போர் பல அசௌ கரியங்களை எதிர் கொண்டுள் ளனர். (33)

## நுளம்பு வலைகள் அன்பளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மாவட்டவைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் நன்மைகருதி நெடுந்தீவு புனித டொன்பொஸ்கோ இளைஞர் மன்றத் தினரால் ஒரு தொகுதி நுளம்பு வலைகள் அன்பளிப்புச்செ சய்யப் பட்டுள்ளன. மேற்படி வைத்திய சாலையின் மாவட்டவைத்திய அதிகாரி திருநாவுக்கரசிடம் இவை கையளிக்கப்பட்டுள்ளன. (33)

## கிளி. அறிவியல் நகரில் நிறுவவுள்ள விவசாயபீட வளாகத்திற்கு 175 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீட வளாகம் ஒன்றினைக் கிளிநொச்சியில் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்று வருகிறன.

கிளிநொச்சியில் உள்ள அறிவியல் நகர் பிரதேசத்தில் இவ் விவசாய பீட வளாகம் நிறுவப்பட விருக்கிறது. இதற்காக உடனடி யாக 175 மில்லியன் ரூபா ஒதுக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2006 ஆம் ஆண்டு இப்புதிய விவசாய பீட வளா கத்தில் கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஏதுவாக இப்புதிய வளாக அமைப்பு துரிதகதியில் இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது (33)

## சுனாமி பாதித்தோருக்கு லயன்ஸ் கழகம் உதவி

(பருத்தித்துறை)

சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோர மக்க ளுக்கு வடமராட்சி லயன்ஸ் கழகத் தினர் துவிச்சக்கர வண்டி,பண உதவி,மூக்குக் கண்ணாடி,மருந்துப் பொருட்கள் என்பவற்றை வழங் கினர்.

வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் மு.தர்மலிங்கம் தலைமையில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு இந்நிகழ்வு நடைபெற்றது. இங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர வாழ் மாணவர்கள் ஐந்து பேருக்கு துவிச்சக்கரவண்டி யும். ஆறு குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா காசோலையும் நான்கு குடும்பங்களுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா காசோலையும் வழங்கப்பட்டதுடன் முந்நூற்றைம்பது பேருக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்பட்டது. தொடர்ந்து பல் வைத்தியத்தினை வைத்தியர் ஜெய ராஜாவும் பொது வைத்தியத்தினை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேல் பிள்ளையும் மேற்கொண்டனர்.

இதற்கு அனுசரணையாளர் களாக பருத்தித்துறை வர்த்தக சங் கத்தினர், சிலோன் அசோசியேசன் ஒவ்வேக் மலேசியா, பொறியி யலாளர் தேசிகாமணி, வி.எம். ரஞ்சன், வி.எம்.ரமேஸ் லயன்ஸ், எஸ்.எம். பெர்னாண்டோ நிறுவனத் தினர் பங்கு கொண்டனர் . (கா)

## உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வர்த்தகசங்கத்தினர் வலிகாமத்தில் அமைந்துள்ள மூன்று வைத்தியசாலைகளுக்கு வைத்திய உபகரணங்களை வழங் கியுள்ளனர். தெல்லிப்பழை மாவட்டவைத்தியசாலை, பண்டத் தரிப்பு அரசினர் கிராமியவைத் தியசாலை, சங்கானை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றிற்கே இவ்வாறு வைத்திய உபகரணங் கள் வழங்கப்பட்டுள்ளன். (33)

## பொது மண்டபம் திறப்பு விழா

(வடமராட்சி)

பருத்தித்துறை துன்னாலை வடக்கு கிராம.அபிவிருத்திச் சங்கத்தினரால் நியாப் விவசாயத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொது மண்டபம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு வ.சிவானந்த விக்னேஸ்வரன் தலைமை தாங்கினார். இதற்கு பிரதமர் விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஸ் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, நியாப் திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஸ்ணன், பருத்தித்துறை பிரதேச செயலர் சு.வசந்தகுமார்,வடமராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் ந.இன்பன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (கா)

## ஆய்வு நூல் வெளியீட்டு விழா

(ஏழாலை)

"யாழ்ப்பாண தமிழ் பிரபந்தம் இலக்கியங்கள்" என்ற ஆய்வு நூல் வெளியீட்டு விழா வரும் எட்டாம் திகதி இரவு 7.00 மணிக்கு ஏழலை களபாவோடை ஸ்ரீ நாகபூஷனி அம்மன் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு யாழ்பல்கலைக்கழக கல்விப்பீடத் தலைவர் பேராசிரியர் சபாஜெய ராசா தலைமை தாங்குவார் (33)

## -வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம்-
## முல்லை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு

(வட்டுக்கோட்டை)

யாழ். வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கு 30துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது.

முல்லை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களினது கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளைக் கவனத்தில் கொண்டே இவை வழங்கப்பட்டுள்ளன. (33)

## வணிகர் கழக நிர்வாகிகள் தெரிவு

யாழ்.வணிகர் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், நிர்வா கிகள் தெரிவும் கடந்த வாரம் யாழ் வணிகர்கழக மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்படி தலைவராக இ.ஜெயராஜாவும், உபதலைவராக இ.ஜெயசேகரமும், செயலாளரா க.ச.சிவகுமாரனும், உப செயலா ளராக இ. சிவலிங்கமும் பொருளா ளராக த.குணசிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (33)

## சிறுகைத்தொழிலாளர்கள் பதிவு செய்து கொள்க

(யாழ்ப்பாணம்)

நாடெங்கிலுமுள்ள சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் முயற்சியா ளர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங் களுக்கும் இதற்கான விண்ணப் பங்கள் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

இவ்வகை கைத்தொழிலாளர் கள் அனைவரையும் இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் வடமா காணப் பிரதிப் பணிப்பாளர் தெபால சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

## வீடிழந்தோருக்கு உதவு தொகை

சுனாமி அனர்த்தத்தால் வீடிழந்தோருக்கு இலங்கை வங்கி உதவுதொகைகளை வழங்கவுள்ளது. இதன்படி சுனாமியால் முற்றாக வீடிழந்தவர்களுக்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பகுதியாக வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

இதைவிட பாதிக்கப்பட்ட கைத்தொழிலாளர், வர்த்தகர்களுக்கு வட்டி யில்லா கடனுதவிகளையும் வழங்கவுள்ளது. இதற்கான மேலதிக விபரங் களை இலங்கை வங்கிக்கிளைகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

## 275 கடற்றொழிலாளருக்கு வலைகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்திலுள்ள 275 கடற்றொழிலாளர்களுக்கு தலா ஒவ்வொரு மீன்பிடிவலைகளை மூவிமென்டோ நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

இதனடிப்படையில் வலிகாமம் தென்மேற்குப் பகுதியிலுள்ள அராலி,சுழிபுரம்,தொல்புரம்,மூளாய், பொன்னாலை போன்ற இடங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு இவ்வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதி கடற்றொழிலாளர்களின் தொழில் துறை அபிவிருத்திகளை நோக்காகக்கொண்டே இவை வழங்கப்பட்டுள்ளன. (33)

# வடக்கு-கிழக்கின் அபிவிருத்திப் புறக்கணிப்பை தற்போதைய அரசு இறுக்கமாகக் கடைப்பிடிக்கிறது!

## -பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம்

(திருமலை)

**"அபிவிருத்தித் துறையில் வடக்குக்கிழக்கு மாகாணம் இன்றும் அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. திரியாய்க்கிராமத்தில் கடந்த ஆட்சியின் போது திட்டமிடப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டிருந்த நீலப்பனிக்கன்குளம் புனரமைப்புத்திட்டம், தற்போதைய ஆட்சியின் கீழ் நிறுத்தப்பட்டுள்ளது"**

இவ்வாறு திருகோணமலை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தெரிவத்தார். கடந்த சனிக்கிழமை மாலை திருமலை நியூசில்வர் ஸ்டார் ஹோட்டலில் திருமலை மாவட்ட சமூகபொருளாதார அபிவிருத்திச்சங்கத்தினால் (செடோற்) நடத்தப்பட்ட நிகழ்வில் பங்குபற்றி பேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். செடோற் தலைவர் டாக்டர் கே.சசிதரன் தலைமைவகித்தார். கனடா வாழ் திருமலை தமிழ் மக்களால் நடத்தப்படும் திருமலை நலன்புரி நிலையம்- கனடா என்ற அமைப்பு செடோற் ஊடாகத் தொண்டர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதக்கொடுப்பனவு வழங்கும் திட்டஅறிமுக நிகழ்வாக இது அமைந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம், தொடர்ந்து பேசும்போது, "மீளக்குடியமர்ந்த கிராமங்களில் வீடுவசதிகள் இல்லை. ஒழுங்கான போக்குவரத்தும் கிடையாது. இவ்வ மீளக்குடியமர்ந்த மக்களுக்குக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை விரைவில் பிறக்கவேண்டும். இந்த நெருக்கடிக்குள் வாழும் மக்களுக்குக் கனடாவில் வாழும் திருமலை இளைஞர்கள் உதவமுன்வந்திருப்பது பாராட்டுதற்குரிய செயலாகும்." என்று தெரிவித்தார்.

செடோற் தலைவர் டாக்டர் சசிதரன் பேசும்போது "திருமலை நலன்புரி நிலையம்-கனடா அமைப்பு செடோற் மூலம் மீளக்குடியமர்ந்த மக்கள் வாழும் திரியாய், நொச்சிக்குளம் பகுதிப்பாடசாலைகளில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கு மாதம் 3000 ரூபா கொடுப்பனவாக வழங்குவதற்கு முன்வந்துள்ளது. அது போன்று அடம்போடை முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதம் 2000 ரூபா வழங்குவதற்கு முன்வந்துள்ளது. அத்துடன் கடற்கோள் காரணமாக தொழிலிழந்த மீனவர்கள் தொழில் செய்வதற்காக சைக்கிள்கள் வழங்கவும் கனடா அமைப்பு முன்வந்துள்ளது." என்றும் தெரிவித்தார்.

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட ஆலங்கேணியைச் சேர்ந்த ஜெயக்குமார் தயாபரன் அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக 180,000 ரூபாவை திருமலை நலன்புரிநிலையம்-கனடா அமைப்பு வழங்கியுள்ளது என்றும் டாக்டர் சசிதரன் தெரிவித்தார். மற்றும் பலர் பேசினர்.

தொண்டர் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவைப் பாராளுமன்றஉறுப்பினர் துரைரெட்ணசிங்கம் வழங்கினார். மீனவர்களுக்குச் ஈருருளிகளைச் சட்டத்தரணி கரிகாலன் வழங்கினார். இருதயநோய்க்கான சிறுவனுக்குரிய கொடுப்பனவை செடோற் பிரமுகர் எஸ்.சண்முகநாதன் வழங்கினார். (25)

### விதை உற்பத்தியாளர் கூட்டம்

மன்னார் மாவட்டத்தின் விதைகள் உற்பத்தியாளர்களின் அமைப்புக் கூட்டம் கடந்த சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் செ. பிறேம்குமார் தலைமையில் இடம்பெற்றது. இதில் துறைசார் பிரதேசப் பொறுப்பாளர்கள் உட்பட விவசாய அமைப்புக்களின் 50 இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (18)



முல்லைத்தீவு உண்ணாப்புலவுப்பகுதியில் இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதற்கான ஏற்பாட்டினை படத்தில் காணலாம். (படம்-குகன்)

## அம்பாறையில் நோர்வே அரசின் நிதியுதவியுடன் தற்காலிக மீள்குடியேற்றத்திட்டம் திறப்பு

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள கவடாப்பிட்டியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கட்டி முடிக்கப்பட்ட இரண்டாவது தற்காலிக மீள்குடியேற்றத்திட்ட திறப்பு விழா கடந்த சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.பி.ப. 4.30 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் பொ. ஆதவன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் திருக்கோவில் உதவிப்பிரதேச செயலாளர், ஆலையடிவேம்பு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகதத்ர், கிராம சேவகர்கள், கண்ணகிபுரம் விசேட அதிரடிப்படை பொறுபதிகாரி, மதகுருமார், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், கிறிஸ்தவ இல்ல கன்னியாஸ்திரிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து அக வணக்கம் இடம் பெற்றது. தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழக பெயர்ப்பலகையை கண்ணகிபுரம் விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி திரைநீக்கம் செய்துவைத்தார் குடியிருப்பின் முதலாவது வீட்டை திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர் சு. கரன் திறந்து வைக்க, இரண்டாவது வீட்டை அக்கரைப்பற்று கிறிஸ்தவ பங்குத் தந்தை திறந்து வைத்தார்.

நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் பொ.ஆதவன், பட்டிமேட்டுக் கண்ணகி அம்மன் ஆலயத் தலைவர், திருக்கோவில் பிரதேச செயலக உதவிப் பிரதேசச் செயலாளர், தமிழர்புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் செலவராசா ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து கிறிஸ்தவ இல்லத்தின் அருட்சகோதரிகளினூடாக சிறு கைத்தொழில் முயற்சிக்கான பணத்தொகை மாதர் சங்கத்தலைவியிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் கையளிக்கப்பட்டதுடன், மக்களுக்கான வீட்டுரிமை அட்டைகளும் கையளிக்கப்பட்டன. தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் வீடுகளைப் பார்வையிட்டதையடுத்து செல்வி. காவியாவின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

## கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிநெறி விண்ணப்பிக்கக் கோரல்

(புதுக்குடியிருப்பு)

முல்லை வலய முறைசாராக் கல்விப்பிரிவு நடைமுறைப்படுத்தும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி ஒன்று 38ஏ முறைசாராக் கல்விப் பிரிவு 2005 பயிற்சி நெறி எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகின்றது இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்பும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் நான்காம் திகதி வரை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபரிடம் அடையாள அட்டை யுடன் சென்று பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவும். முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் நடைபெறவுள்ளது. ஆரம்ப ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி (சனி) காலை 9.30 மணிக்குப் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெறுமென முல்லை வலய முறை சாராக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.இராசரட்ணம் தெரிவித்துள்ளார். (08)

## கரைச்சிக் குடியிருப்பில் 50 குடும்பங்கள் குடியமர்த்தல்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு தண்ணீரூற்று பாடசாலை நலன்புரி நிலையத்தில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் பராமரிக்கப்பெற்று வந்த 50 குடும்பங்கள் கடந்த சனிக்கிழமை முல்லை கரைச்சி குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமில் குடியமர்த்தப்பட்டனர்.

அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வில் முல்லை மாவட்ட சுனாமி நடவடிக்கை பணிப்பாளர் றெஜி, தமிழீழக் கடற்படைகளின் தளபதிகளில் ஒருவரான தளபதி தினேஷ், செயலணிக்குழு இணைப்பாளர் ஈழமாறன், சுனாமி அனர்த்த வேலைத்திட்ட ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் வின்சன், முல்லை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் முகுந்தன், தமிழர் புனாவாழ்வுக்கழக முல்லை மாவடடப் பணிப்பாளர் மூர்த்தி, சிறுவர் நலத் திட்டப் பணிப்பாளர் ரவி ஆகியோர் கலந்துகொண்டனர். (சோ)

## உலக பெண்கள் தினத்தை முன்னிட்டு முல்லையில் பிரதேச ரீதியாக கருத்தூட்டல்

### - ஆர்வலர்களைப் பங்கேற்க அழைப்பு

(புதுக்குடியிருப்பு)

உலக பெண்கள் தினத்தை முன்னிட்டு முல்லை மாவட்டத்திற்குட்பட்ட ஆறுபிரதேசங்களில் கருத்தூட்டல் கூட்டங்கள் இடம் பெற ஏற்பாடாகியுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் நான்காம் திகதியன்று காலை 9.00 மணிக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியிலும் மற்றும் மல்லாவி மத்திய கல்லூரியிலும், கற்சிலைமடு பாடசாலையிலும், ஐந்தாம் திகதி காலை 9.00 மணிக்கு பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்திலும் ஆறாம் திகதி காலை 9.00 மணிக்கு மாங்குளம் மகாவித்தியாலயத்திலும் ஏழாம்திகதி காலை 9.00 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் இக்கருத்தூட்டல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்து ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு முல்லை.மாவட்ட அன்னையர் முன்னணியினர் கேட்டுக்கொள்கின்றனர். (08)

## பணியாளர் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அக்கராயன் பிரதேச பங்காளி நிறுவனங்களின் பணியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு கடந்த புதன் கிழமையன்று கிளிநொச்சி உதய நகர் வடக்கு கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தில் நடைபெற்றது.

அக்கராயன் பிரதேச தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவிப்பணிப்பாளர் நல்லையா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை கரைச்சிப்பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம், கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் இ.கணேசபிள்ளை ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை கிளி.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் பூங்குன்றன் மாஸ்ரர் ஏற்றிவைத்தார்.

தலைமையுரையினையடுத்து சிறப்புரையினை கரைச்சிப்பிரதேச சபை விசேட ஆணையாளர், கிளி. மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர், செயலர், தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளி.மாவட்ட பணிப்பாளர், மாவட்ட இணைப்பாளர், உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆகியோர் வழங்கியதுடன் பணியாளர்களுக்குச் சிறப்புப்பரிசில்களை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.(சோ)

## பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

புதுக்குடியிருப்புப் பிரதேச சிவநகர் அ.த.க. பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கப்பொதுக்கூட்டம் கடந்த வெள்ளியன்று பிற்பகல் 3.00 மணிக்கு அதிபர் சின்னராசா தலைமையில் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும், பாடசாலை அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பேரின்பநாயகம், கிராம அலுவலர் தயாசீலன், கிராமப்பொறுப்பாளர் பரிதியன் ஆகியோரின் கருத்துரையைத் தொடர்ந்து, புதுக்குடியிருப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. பிறையாளன் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர், மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (08)

### இன்று திறப்பு விழா

(மன்னார்)

ஜப்பான் நாட்டின் "ஜெய்க்கா" நிறுவனம் மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்கென 230 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தேத்தாவாடி, மருதன்குளம், சமயபுரம் வீட்டுத திட்டம், புதுக்கமம், சாந்திபுரம் சவுத்பார் ஆகிய கிராமங்களிற்கு நீர் வழியோகம், மின்சாரம் மருந்தகம், முன்பள்ளிகள் பாடசாலைக் கட்டடங்கள், போன்றவற்றை அமைத்துக் கொடுத்துள்ளது. இவை இன்று முதலாம திகதி திறந்து வைக்கப்படவுள்ளன. (18)

# இஸ்ரேலின் டெல்அவிவ் குண்டுத் தாக்குதல் சிரியாவுக்கு தொடர்புண்டு - ஏரியல் ஷரோன்

(டெல்அவிவ்)

இஸ்ரேலின் டெல் அவிவில் கடந்தவெள்ளிக்கிழமை இடம் பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலின் பின்னணியில் சிரியா இருப்பதாகத் தாம் தெரிவித்துள்ளமைக்கு வலுவான காரணங்கள் இருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இச் சம்பவத்தின்போது நான்கு பேர் உயிரிழந்ததுடன் 30 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். இத் தாக்குதலுக்குத் தாமே காரணம் என மஸ்கஸ்சில் உள்ள இஸ்லாமிய ஜிகாத் அமைப்பு உரிமைகோரியது. தமது நாட்டிலுள்ள ஒரு அமைப்பு இத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவித்த போதிலும் சிரியா இத்தாக்குதலின் பின்னணியில் இருப்பதை அந் நாட்டு அரசாங்கம் மறுத்துள்ளது. இந் நிலையில் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளினதும் ஐரோப்பிய யூனியனில் உள்ள நாடுகளினதும் இஸ்ரேலுக்கான வெளிநாட்டுத் தூதுவர்களுக்குமான சந்திப்பொன்றிற்கு இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார். இதேவேளை பலஸ்தீன அதிகாரிகள் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கையைத் தடுத்துநிறுத்தும் வரை சமாதான நடவடிக்கை களை இடை நிறுத்துவதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ளார்.

சிரியாவிலுள்ள தமது தலைவர்களின் உத்தரவிற்கு இணங்கவே பலஸ்தீனப் போராளிகள் தாக்குதலை மேற்கொண்டதாகக் குற்றம் சாட்டிய ஏரியல்ஷரோன் இஸரேலிய இராணுவம் தமது சிவிலியன்களைப் பாதுகாக்க கடுமையான நடவடிக்கை எடுக்கும் என எச்சரித்துள்ளார்.



லெபனானில் தங்கியிருக்கும் சிரிய இராணுவத்தை விலகக் கோரி பெய்ரூட் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை அடக்க முனையும் இராணுவத்தினர்.



உலக சுற்றுலா அழகிப்போட்டி ஹராரேயில் நடந்தது. பல்வேறு நாடுகளில் இருந்து 91 அழகிகள் இந்தப்போட்டியில் கலந்து கொண்டனர். இந்தப்போட்டியில் 'செக்' குடியரசைச் சேர்ந்த சுசாரா புட்ரோவா உலக சுற்றுலா அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கிரீடம் சூட்டிக்கொண்டார். இரண்டாவது இடம் ஸ்பெயின் நாட்டு அழகி ராக்வெவ் பபல் சியாவுக்கும், மூன்றாவது இடம் சிம்பாப்வே அழகி ஆசில் முருங்குக்கும் கிடைத்தது.

# முன்னாள் பிரதமர் கொலையின் எதிரொலி லெபனானில் உள்நாட்டு கலவரம் வெடித்தது

(பெய்ரூட்)

**லெபனான் நாட்டு முன்னாள் பிரதமர் ரபீக் ஹரீரி கடந்த 14ஆம் திகதி பெய்ரூட் நகரில் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் சிரியா நாட்டின சதி இருப்பதாக லெபனான் எதிர்க்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் அங்கு உள்நாட்டுக் கலவரம் வெடித்துள்ளது.**

இப்போது இருக்கும் லெபனான் அரசு சிரியாவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகிறது. லெபனானில் சிரியா நாட்டு இராணுவத்தினர் 15000 பேர் உள்ளனர். சிரியாவைக் கண்டித்தும்,சிரியா நாட்டு இராணுவத்தை வாபஸ் பெறக்கோரியும் எதிர்க் கட்சியினர் போராட்டம் நடத்தினார்கள். இந்தப் போராட்டம் பயங்கரக் கலவரமாக வெடித்தது.லெபனானின் குவானா நகரில் சிரியா அதிபர் ஹபீஸ் அல் ஆசாத்சிலை அமைக்கப்பட்டு இருந்தது. கலவரக் காரர்கள் இந்தச் சிலையை உடைத்து நொருக்கினார்கள். ஆசாத் சிரியாவில் 30 ஆண்டுகள் ஆட்சி நடத்தியவர். லெபனானில் உள்ள சிரியா நாட்டு தொழிலாளர்களின் குடியிருப்புக்களையும் லெபனான் நாட்டு எதிர்க்கட்சியினர் தீ வைத்து கொளுததினார்கள். கலவரம் முற்றியதைத் தொடர்ந்து பல் வேறு பகுதிகளில் அரசு தடை உத்தரவு பிறப்பித்தது.

இந்தத் தடை உத்தரவையும் மீறி ஆயிரக்கணக் கானவர்கள் பேரணி நடத்தினார்கள். இந்த நிலையில் லெபனான் அரசின் நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந்த எிசக்திததுறை அமைச்சர், பொருளாதாரத்துறை அமைச்சர் மற்றும் நிர்வாக வளர்ச்சித்துறை அமைச்சர் ஆகியோர் தங்கள் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டனர். இது லெபனானின் அரசுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

# "மில்லியன்டொலர் பேபி" சிறந்த படமாகத் தேர்வு



சினிமா கலைஞர்களின் இலட்சிய எல்லையாக விளங்கும் ஒஸ்கார் விருது வழங்கும் விழா ஆண்டு தோறும் ஹொலிவூட்டில் நடத்தப்படுகிறது.

உலக அளவில் பலநாடுகளில் தயாரிக்கப்பட்ட சிறந்த படங்கள் ஒஸ்கார் விருதுக்காக பரிந்துரைக்கப்படும். ஏழாவது ஆண்டு ஒஸ்கார் விருது வழங்கும் விழா ஹொலிவூட்டில் நேற்று முன்தினம் மாலை நடந்தது.

ஈஸ்ட்வுட் இயக்கிய "மில்லியன் டொலர் பேபி" படம் சிறந்தபடமாக தேர்வு செய்யப் பட்டுள்ளது. இந்தப் படத்தை இயக்கி கதாநாயகனாக நடித்த ஈஸ்ட்வுட் சிறந்த நடிகருக் கான ஒஸ்கார் விருதையும், சிறந்த நடிகைக்கான விருதை ஹிலாறிஸ வாங்குக்கும் கிடைத்துள்ளது. இநதப்படத்திற்கு சிறந்த இயக்குனர், சிறந்த துணை நடிகருக்கான விருதும் கிடைத் துள்ளது. ஸ்வாங்க ஏற்கனவே 2000ஆம் ஆண்டு 'பாய்ஸ் டோன்ட்கிரை' படத்துக்காக ஒஸ்கார் விருது பெற்றுள்ளார். ஐந்து ஆண்டுக்குப் பிறகு ஸ்வாங்கிற்கு மீண்டும் ஒஸ்கார் விருது கிடைத்துள்ளது.

# பூட்டானில் புகைப்பிடிக்க மேலும் தடைகள் அமுல்

பூட்டான் நாட்டில் சிகரெட்டுக்கள விற்க இரண்டு மாதங்களுக்கு முன்பு தடை விதிக்கப்பட்டது. அது வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இப்போது பொது இடங்கள், ஹொட்டல்கள்,மதுபான விடுதிகள், கல்விநிலையங்கள், அரசு அலுவலகங்கள்,பஸ்கள் ஆகியவற்றில் புகைப்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மொத்த மக்கள் தொகையான ஏழு இலட்சத்தில் மூன்று சதவீத நகர மக்களும், ஒரு சதவீத கிராம மக்களும் புகைப்பிடிக்கும் பழக்கம் உடையவர்கள்.

# நேபாள ராணுவத்துக்கு கசப்பான அனுபவம்

(காத்மண்டு)

உலகில் எங்காவது கலவரம், சண்டை மூண்டால் அந்தப்பகுதிக்கு அமைதி காக்கும் பணிக்குச் செல்வதில் பெயர் பெற்றது நேபாள இராணுவம். ஐ.நா. ஆதரவிலான அத்தகைய பணிக்குப் பலதடவை சென்றுள்ளது. சியாரா லியோன் கிழக்கு தைமூர்,கோசவோ,காங்கோ, லைபீரியா,புருண்டி,லெபனான் என ஆபத்து மிக்க பல பகுதிகளில் அமைதி காப்புப்பணியில் ஈடுபட்டுள்ளது. இப்போது கூட ஐ.நா. அமைதிக்காப்புப் படையில் அதன் 3000 வீரர்கள் உள்ளனா. நேபாளத்தில் இப்போது உள்நாட்டுப் போர் மூண்டுள்ளதால் உள்நாட்டில்போரில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# 26 ஆண்டுகளில் முதல் முறையாக போப் ஆண்டவருக்குப் பதிலாக உதவியாளர் ஆராதனை



(ரோம்)

போப் ஆண்டவர் கடந்த 26 ஆண்டுகளாக ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பக்தர்களுக்கு அருளுரை வழங்குவார். நேற்று முன் தினம் முதன் முதலாக அவருக்குப் பதிலாக அவரது உதவியாளர் இந்தப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

82 வயதான 2ஆம் ஜான்பால், போப் ஆண்டவர் ஆனது முதல் கடந்த 26 ஆண்டுகளில் ஒரு முறை கூட தவறாமல் ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனை கூட்டங்களில் கலந்து கொண்டு வந்து இருக்கிறார்.

வெளிநாடுகளுக்குச் சென்ற போது கூட, அந்த இடங்களில் ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனைக் கூட்டங்களில் கலந்து கொண்டார். 1981 ஆம் ஆண்டு மே மாதம் போப் ஆண்டவர் துப்பாக்கியால் சுடப்பட்டு சாவின் விளிம்பைத் தொட்ட நான்காவது நாளில் கூட வைத்தியசாலை படுக்கையில் இருந்தபடி வானொலி மூலம் ஆசியுரை வழங்கினார்.

இந்த மாதத் தொடக்கத்தில் ஏற்கனவே ஒரு முறை வைத்திய சாலையில் இருந்தபோது கூட அவர் ஜன்னல் அருகே அமர்ந்திருக்க அவரது உதவியாளர் அவா சார்பில் அருளுரையைப் படித்தார்.

நேற்று முன்தினம் அவருக்குப் பதிலாக அவரது உதவியாளர் ஆர்ச்பிஷப் லியோனார்டோ சாண்ட்ரி புனித பீற்றர் சதுக்கத்தில் பிரார்த்தனை நடத்தினார். போப் ஆண்டவர் சார்பில் அருளுரை வழங்கினார்.

போப் ஆண்டவர் வைத்திய சாலையில் இருந்தபடியே பிரார்த்தனையில் கலந்து கொள்வார் என்று வத்திக்கான் அறிவித்தது.

இது தொடர்பாக அது வெளியிட்டுள்ள அறிக்கையில், சுவாசக் கோளாறை நீக்குவதற்காக தொண்டையில் சத்திரசிகிச்சை நடந்ததால் அவரால் தற்காலிகமாகப் பேச முடியவில்லை எனவே அவர் தன் அதிகாரத்தை உதவியாளரிடம் கொடுத்து இருக்கிறார். வைத்தியசாலையிலுள்ள தன் அறை ஜன்னல் அருகேயும் பக்தர்களுக்கு காட்சி தரவும் மாட்டார் என்று கூறப்பட்டு இருந்தது. ஆனால் அவர் நேற்று முன்தினம் ஜன்னல் அருகே நின்று பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார்.



ஈராக்கில் நிர்வாக அதிகாரம் கைமாறும் நிகழ்வின்போது பாக்தாத்தின் யுத்த சூனியப் பிரதேசத்தில் உலங்குவானூர்திகள் தரையிறங்குகின்றன.

# அமெரிக்காவால் தேடப்பட்டுவந்த சதாமின் உறவினர் கைது

ஈராக் முன்னாள் சனாதிபதி சதாம்ஹுசைனின் உறவினர்களில் ஒருவரான சபாவி இப்ராஹிம் ஹசன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க இராணுவம் தேடிவந்த ஈராக்கைச் சேர்ந்த 55முக்கிய நபர்களின் பட்டியலில் இவர் 36ஆவது இடத்தில் இருந்தார். சதாம்ஹுசைனின் ஒன்றுவிட்ட சகோதரர் ஹசன் எனக் கூறப்படுகிறது. ஈராக் இராணுவத்திடம் இவர் பிடிபட்டாரா அல்லது அமெரிக்க இராணுவம் கைது செய்ததா என்ற விபரம் தெரியவில்லை.அமெரிக்க இராணுவம் தேடிவரும் 55 நபர்களில் இன்னும் 11பேர் மட்டுமே பிடிபடாமல் இருந்து வருகின்றனர். அவர்களைத் தேடிக் கண்டறியும் பணியை அமெரிக்க இராணுவம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.



சூடான் மாநிலம் என வர்ணிக்கப்படும் மத்திய பக்தாத்தில் ஆபிரிக்க இனத்தவர் ஒருவர் ஈராக்கிய இராணுவத்ததால் கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிறார்.

# அபூர்வமாகப் பிறந்த வெள்ளைநிறப்பிள்ளை அநாதையாக மாறித் தவிக்கிறது

**முல்லைத்தீவு இறால் குளத்தை வசிப்பிடமாகக் கொண்ட இளம் குடும்பத்தில் சுனாமி அலையில் சிக்கி தாயார் உயிரிழந்து போனார். தந்தையாரும், பத்து மாதக் குழந்தை (வினோஜா)யும் உயிர்தப்பினார் .இந்த நிலையில் வினோஜாவின் தந்தையார் மனரீதியாக மிகவும் ஆழமாக பாதிப்படைந்து காணப்படுகிறார். இந்த நிலையில் வினோஜா பெரியம்மாவின் அரவணைப்பில் வாழ்ந்து வருகிறார். இதுபற்றி பெரியம்மா உதயசாந்தி விபரிக்கிறார்.**

பகுதி-30

அ.லோகீசன்



கடலில் இருந்து எழுந்து வந்த இராட்சத சுனாமி அலைகளின் கோரத்துக்குள் சிக்கித் தங்கள் உறவுகளை இழந்தவர்கள் பலர். அவர்களில் சிலர் தமது குடும்ப உறுப்பினர்களின் இழப்பில் இருந்து இன்னமும் மீளவில்லை. உளவியல் ரீதியாக மோசமாகப் பாதிப்படைந்துள்ளனர். தமது சுயமான கட்டுப்பாட்டை மறந்து என்ன செய்கிறோம் என்பதே தெரியாமல் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் முல்லைத்தீவு இறால் குளத்துக்கு அருகில் உள்ள 35 வயதுடைய அமரசீலன் என்பவர் திருமணமாகி இரண்டு வருடங்களுக்கிடையில் தனது மனைவியை சுனாமியால் பறிகொடுத்து விட்டார்.

இந்த நிலையில் அவரது ஒரேஒரு மகள் வினோஜா (10மாதம்) என்ற குழந்தை உயிர் தப்பிவிட்டது. வெள்ளைக்காறப் பிள்ளை போல தோற்றமளிக்கும் இந்தக் குழந்தையைக் கூட அவரால் அன்பாக அரவணைக்க முடியவில்லை. அந்தளவுக்கு அந்த மனிதரை பிரிவுத் தாக்கம் வாட்டி வருகிறது.

இதனால் அந்தக் குழந்தை பெரியம்மாவின் அரவணைப்பில் வாழ்ந்து வருகிறது. உதயசாந்தி என்ற அந்தப் பெரியம்மா இந்தப் பிள்ளை எப்படி உயிர் தப்பியது? அவரது குடும்பம் எப்படியானது? அந்தக் குழந்தையின் இன்றைய நிலை என்ன? என்பவற்றை எங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

எங்கட கிராமத்தில வெள்ளைக்காறர் மாதிரியான தோற்றத் தில பிறந்தபிள்ளை வினோஜா எண்டுற இந்தப் பிள்ளை தான். அதால எல்லாரும் இந்தப் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு போடுவினம் அந்தளவுக்கு எல்லாருக்கும் ஆசை.

இப்பிடித்தான் அண்டைக்கும் இந்தப் பிள்ளையின்ர தகப்பன் அமரசீலன் (கண்ணன் வயது 35) அவர் தொழில் விசயமாய் வண்ணாங்குளம் பக்கம் போட்டார். தாய், ஜெயந்தி (வயது 30) உடுப்புத் தைக்கிறவா அவா தன்ர வேலையில் இருக்க என்ர பிள்ளையளும் எல்லாம் பக்கத்து வீட்டுக்குப் படிக்கப் போட்டினம். அப்ப நான் போய் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வந்து எங்கட வீட்டில வைச்சிருந்தன்.

இப்பிடியே கொஞ்ச நேரம் இருந்திட்டு இவர் கடலுக்குப் போக வெளிக்கிட்டார். அவர் வெளிக்கிட தானும் வாறன் எண்டு அழ வெளிக்கிட்டுட்டாள். இவள் அழ இவர் சைக்கிள்ள இருத்திக் கொஞ்சத் தூரம் கூட்டிக்கொண்டு போய் திருப்பிக் கொண்டு வந்து இறக்கிப் போட்டுக் கடலுக்குப் போட்டார். இவர் போக பக்கத்து வீட்டுக்காறப் பிள்ளை வந்து இந்தப் பிள்ளையைத்தூக்கிக் கொண்டு போச்சுது.

எனக்கும் வேலை இல்லாமல் இருந்தது. அதால நானும் போய் அங்க இருந்து பிள்ளைக்கு விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தன்.

திடீர் எண்டு 'செயின்பிளக்' சத்தம் கேட்டமாதிரி ஏதோ பெரிசா இரைஞ்சு கொண்டு வாறமாதிரி சத்தம் கேட்டிச்சுது. அப்ப நாங்கள் நினைச்சம் லையிற் வரப்போகுது போஸ்ருகள் கொண்டந்து நட்ட வயள் அது தான் அந்த வாகனம் வருகுது போல அதைப் போய்ப் பார்ப்பம் எண்டு எல்லாருமா கதைச்சுக்கொண்டு பிள்ளையையும் தூக்கிக்கொண்டு வெளியால வந்தம்.

வெளியால வரச்சத்தம் வித்தியாசமாயும் கிட்டக்கிட்டவுமாகவும் கேட்டுக்கொண்டிருந்தது. இது என்னடா சத்தம் எண்டு பார்த்தால் ஒரு பனை உயரத்தில கடல் பாம்பு சீறினமாதிரி சீறி அடிச்சுக் கொண்டு வந்தது.

இதைப் பார்த்த பயத்தில "ஐயோ கடல் வருகுது" எண்டு கத்திக் கொண்டு இந்தப் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு என்ர பிள்ளையளிட்ட ஓடிப்போக அவையள் எல்லாரும் எங்கட சொந்தக்காறரோட சேர்ந்து ஓடிவந்து கொண்டிருந்திச்சினம். "குளக்கட்டால ஓடிப்போய் அங்கால நில்லுங்கோ நான் பிள்ளையையும் கொண்டு வாறன்" எண்டு சொல்லி அவையள அனுப்பிப்போட்டு என்ர தங்கச்சி ஜெயந்தி (வெள்ளைக்நிறப் பிள்ளையின் அம்மா) க்கு "கடல் வருது ஓடிவா" எண்டு கத்திச் சொல்லிப்போட்டு நானும் ஓடிக் கொண்டிருந்தன்.

ஒருமாதிரி ஓடிப்போய் குளக் கட்டில ஏற கடல் வந்து என்னை அடிச்சு விழுத்திப்போட்டுது. நான் தண்ணீக்குள்ள விழுந்தவுடன இந்தப் பிள்ளையை என்னோட சேர்த்து இறுக்கி அணைச்சுப் பிடிச்சு தத்தளிக்க என்னை ஒருத்தர் பிடிச்சு மேல தூக்கினார். தூக்கினபிறகுதான் பார்த்தன் என்ர அவர் என்னைத் தூக்கி விட்டுட்டு என்ர மற்றப்பிள்ளையள ஒணடொண்டாய் அங்கால கொண்டு போய் சேத்துக்கொண்டிருந்தார்.

இப்பிடி இருக்க குளக்கட்டுக்கு தண்ணி ஏறிட்டுது. கட்டில நிண்ட எங்களுக்கு முழங்கால் அளவில தண்ணி வந்திட்டுது. சிலர் அதில நிண்டு அடிபட்டுப் போய்க்கொண்டிருந்தினம். அதைப் பார்க்க எனக்குப் பயமாய் இருந்தது. இந்தப் பிள்ளையை எப்பிடியாவது காப்பாற்ற வேணும். நான் செத்தாலும் பிள்ளை உயிரோட இருக்க வேணும். தாயையும் காணேல்ல. பிள்ளையைக் கொண்டு போஙகோ நான் வாறன் எண்டு தானே சொன்னவா. நான் பிள்ளையப் பாதுகாப்பாக் கொண்டு போவம் எண்டு அந்த தண்ணீக்குள்ளயும் கஷ்ரப்பட்டுக்கொண்டிருந்தன்.

இப்பிடி இருக்க அந்தக் கரையில் இருந்து என்ர மூத்தவன் "அம்மா பெரிய கடல் வருது என்ன செய்யப் போறியள்" எண்டு கத்திக் கொண்டிருந்தான். இனியும் நிக்க ஏலாது. எப்படியும் இதோட



அங்கால போகாட்டில் இனிப் போகவே ஏலாது எண்டுற முடிவுக்கு வந்து என்னட்ட இருந்து பிள்ளையை இவர் வேண்டி தண்ணீக்குள்ள இறங்கி தன்ர தோளப் பிடிச்சுக்கொண்டு வரச் சொல்லிச் சொன்னார்.

அப்ப இவற்ற தோளில பிடிச்சபடி நான் போக இவர் பிள்ளையை தூக்கிப் பிடிச்சுக் கொண்டு நீந்திக் கொண்டு போனார்.

இப்பிடியே அரைவாசித் தூரத்துக்கு மேல போயிருப்பம் ஒரு கம்பிக்கட்டை ஒண்டு என்ர முழங்காலில அடிச்சு என்னை விழுத்திப் போட்டுது. கீழ விழுந்த உடன "பிளேற்" கம்பி என்னை சுத்திப் போட்டுது. கம்பி சுத்தின உடன நான் தண்ணீக்குள்ள போய்க் கொண்டிருந்தன்.

தண்ணீக்குள்ள போக இவர் ஒரு கையில பிள்ளையை மேல தூக்கிப் பிடிச்சுக்கொண்டு மற்றக் கையால என்னைப் பிடிச்சு இழுத்தார். இப்பிடி இருக்க மற்றக் கரையில் இருந்து வந்து என்ர மூத்தவன் எங்களை ஒரு மாதிரி காப்பாற்றிப் போட்டான்.

எனக்கு நான் தப்ப வேணும் எண்டுற சிந்தனை வரவேயில்லை. எப்படியாவது எங்கட ஊர் ஆக்கள் எல்லாரும் ஆசையாய் அரவணைக்கிற தங்கச்சியின்ர பிள்ளையைக் காப்பாற்ற வேணும் எண்டுறது தான் இலக்காய் இருந்தது. என்ர பிள்ளையளைக் கூட தூக்காமல் அவளைத் தான் தூக்கிக்கொண்டு ஓடி வந்தனான். இந்தப் பிள்ளையைக் காப்பாற்றுறதுக்காக நான் பட்ட கஷ்ரதுன்பங்கள் கொஞ்சம் இல்லை.

ஏதோ எங்கட வீட்ட நிண்டபடியால அவள் தப்பீட்டாள். அவளின்ர அம்மா கடலோட அடிபட்டுக் காணாமல் போய்ச் சேந்திட்டா. எல்லாரும் நல்ல வடிவான பிள் ளையை எப்பிடிப் பெத்தனி எண்டு ஆசையாய் அவளிட்ட கேட்டினம். அது அவளுக்கும் பெருமையாய் இருந்தது. அவளுக்கு மட்டும் இந்தப் பிள்ளை பிள்ளையாய் இருக்கேல்ல. எங்கட ஊருக்கே பிள்ளையாய் இருந்தாள். இப்பிடிப் பிள்ளையைப் பெத்ததுக்கு அவள் பட்ட சந்தோசம் எவ்வளவு பெரியது. அந்த மகிழ்ச்சியை அவள் தொடர்ந்தும் பார்க்க முடியாமல் போய் விட்டாள்.

வெள்ளைக்காறப் பிள்ளைக்கு ஒவ்வொரு விதமான உடுப்புத் தைத்துப் போட்டு மகிழ்வாள். இனியார் இந்தப் பிள்ளைக்கு உடுப்புத் தைப்பது.

பாசமாய் தூக்கி தோளில் சுமந்த தந்தை தன் மனைவியின் பிரிவைத் தாங்கமுடியாமல் துன்பத்தின் உச்சத்தில் நின்று தவிக்கிறார். தன்பாட்டில் திரிகிறார். விரக்தியின் உச்சத்துக்குப் போய் மதுவுக்கு அடிமையாகிப் போய் விட்டார். எப்போதாவது ஒரு முறை தன்பிள்ளையிடம் வந்து கட்டித்தழுவி கண்ணீரை கடல் போல வடித்து விட்டுப் போகிறார்.

என்ன செய்வது துயரத்தின் விளிம்புக்கு எங்களை கடல்த்தாய் தள்ளிவிட்டாள். எங்களை எல்லாம் ஊட்டி வளர்த்த தாய் ஏன் எங்கள் உயிரைக் குடித்தாள். பத்துமாதம் மாத்திரம் நிரம்பிய இந்தப் பிள்ளை தன் அம்மாவை ஆசையாய் தேடுகிறது. தன்னைப் பெற்ற அம்மாவை, பாலூட்டிச் சீராட்டி வளர்த்த அம்மாவை, அவளது பதுமையான முகத்தை தேடுகிறது.

இந்த முகாமில் உள்ள எல்லாரையுமே அம்மா... அம்மா... என்று அழைக்கிறது. இந்தக் குழந்தையின் தவிப்பை யார்தான் அறிவார்கள். பிறப்பிலேயே ஒரு அபூர்வத்தைக் காட்டிய கடவுள் அதன் வாழ்வுப் பாதையின் தொடக்கத்தையே மாற்றி விட்டார். பரிதாபம் எல்லாரையும் அம்மா என்கிறது. தங்கள் பிள்ளையை இழந்தவர்கள் மகள் என்கிறார்கள். இப்படியே ஒரு துயரத்தின், அவலத்தின் வாழ்வு தொடங்கிவிட்டது என்றார் அந்தப் பிள்ளையை அரவணைத்து வளர்த்து வரும் பெரியம்மா.

*அடுத்த பகுதியில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழீழ கடற்படை மகளிர் பிரிவுப் போராளி ஆனதி தாங்கள் அங்கு கண்ட காட்சிகளையும் தமது மீட்பு அனுபவம் எப்படி இருந்தது என்பது பற்றியும் விபரிக்கிறார்.*


தொடரும்

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்






## சாதனைக்குரியவரே



உலகில் தற்போதைய விக்கெட் காப்பாளராக சிறந்து விளங்கும் அவுஸ்திரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட் அண்மையில் சாதனை ஒன்றைப் படைத்தார்.

கிறைச்சச் நகரில் நடந்த நியூசிலாந்துடனான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் அவ்வணியில் ஹமிஸ் மாஷலின் பிடியை எடுத்ததும் 300ஆவது பிடியை எடுத்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதற்கு முன்னர் இயன் ஹீலி என்பவர் இந்தச் சாதனையை நிலை நாட்டினார். அவருக்குப் பின்னர் தற்போது கில்கிறிஸ்ட் இதனை எட்டியுள்ளார். எனினும் ஹீலி இவரைப் போன்று துடுப்பாட்டத்தில் திறமை காட்டவில்லை. கிறைச்சச்சில் நடைபெற்ற இப் போட்டியில் கில்கிறிஸ்ட் ஆறு பிடிகளை எடுத்து நியூசிலாந்து வீரர்களை ஆட்டமிழக்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் அவுஸ்திரேலிய வீரர்களில் தனித்துவமானவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதாவது சக வீரர்களுடன் பழகுவதிலும், ஆட்டமிழப்பு வழங்கப்படும் போது தாமதிக்காது வெளியேறுவதிலும் முன் மாதிரியானவராம்.

மொத்தத்தில் அவுஸ்திரேலியாவின் வெற்றிப் பணயத்தில் கில்கிறிஸ்டின் பணி மகத்தானது.

## முதுமையிலும் ஓர் இனிமை

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பலம் குறைந்த சிம்பாப்வே அணியை நடைபெற்று முடிந்துள்ள இரண்டு போட்டி களிலும் அபாரமாக வென்று விட்டது தென்னாபிரிக்க அணி.

இரண்டு போட்டிகளிலுமே முதலில் துடுப்பெடுத்தாடி 300ஓட்டங்களைக்கடந்ததுமே தென்னாபிரிக்காவின் வெற்றி உறுதியாகிவிட்டது. இப்போதைய நிலையில் 300 ஓட்டங்களை விரட்டிச் சென்று வெற்றி பெறும் நிலையில் சிம்பாப்வே இல்லை.

தென்னாபிரிக்க அணி 300 ஓட்டங்களைக் கடந்தது என்றால் முதலாவது போட்டியில் அதற்கு முக்கிய காரணம் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான மார்க் பவுச்சர். அதே போன்று இரண்டாவது போட்டியில் புதிய அதிவேக ஆட்டக்காரர்கென்னின் ஆட்டத்தையும் குறிப்பிடலாம்.

பவுச்சர் 29 பந்துகளில் குவித்த 49 ஓட்டங்கள் 300ஐக் கடக்க உதவியது. இது இக்கட்டான நிலையில் கைகொடுக்கும் வீரர் என்ற நிலையை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் அழுத்தமாக முத்திரை பதித்தவர் மார்க்பவுச்சர் 1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தனது டெஸ்ட் வாழ்க்கையை ஆரம்பித்தார். அப் போது குறைந்த போட்டிகளில் 100 பேரை ஆட்டமிழக்கச் செய்த விக்கெட் காப்பாளர் என்ற பெருமையைப் பெற்ற துடன் உதிரி ஓட்டங்கள் அதிகம் கொடுக்காத விக்கெட் காப்பாளர் என்ற பெருமையையும் பெற்றார்.

இந்த நிலையில் வயதில் முதிர்ந்து விட்ட பவுச்சரின்





அதிரடி ஆட்டம் மீண்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை தென்னாபிரிக்க அணிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி யுள்ளது.

உலகின் சிறந்த விக் கெட் காப்பாளர்களில் ஒரு வராக இன்று வரை திகழும் பவுச்சரின் பணி தென்னாபிரிக்காவுக்கு எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே.

ஏனெனில் அவர் வயதில் முதிர்ந்த விக்கெட் காப் பாளராகவே உள்ளார். எனவே தொடர்ந்தும் துடிப்பான ஆட் டத்தை வெளிப்படுத்துவதற்கு அவரது உடல் நிலை இசைந்து கொடுக்க முடியும் என்பது எதிர்பார்க்க முடி யாததே.

எனவே பவுச்சர் பணி தென்னாபிரிக்காவின் மகத்தான வெற்றியுடன் ஓய்வுக்கு வருவது சாலச்சிறந்ததாக இருக்கும்.

## வெற்றியின் ரகசியம் என்ன?



நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரைக் கைப்பற்றிய அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தனது பலத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்டஒரு நாள் தொடரில் பங்கேற்க அவுஸ்திரேலிய அணி நியூசிலாந்திற்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளது. தற்போது நடை பெற்று முடிந்த மூன்று ஒரு நாள் போட்டிகளையும் வெற்றி கண்டதன் மூலம் தொடர் அவுஸ்திரேலிய வசமாகியுள்ளது.

நியூசிலாந்து அணி இம்மாத ஆரம்பத்தில் அவுஸ்திரேலிய மண்ணில் வைத்து காட்டிய திறமையும், உலக அணிக்கு எதிராக பெற்ற அபார வெற்றியும் அவுஸ்திரேலிய அணியுடனான போட்டியை பரபரப்புக்குள்ளாக்கியிருந்தது.

இதற்கு அணித் தலைவர் பிளமிங், கிறிஸ் கெயான்ஸ், அஸ்ரல் ஆகியோரின் ஆட்டம் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. இவர்கள் சொந்த மண்ணில் அவுஸ்திரேலிய அணியின் கொட்டத்தை அடக்கி நியூசிலாந்து அணியின் பலத்தை நிருபிப்பார்கள் என்று கிரிக்கெட் உலகம் எதிர்பார்த்தது.

ஆனால் இதில் எதுவுமே நடக்கவில்லை. உலக அணிக்கு எதிராக அபாரமாக சதமடித்த பிளமிங்கால் நடைபெற்று முடிந்த மூன்று போட்டிகளிலும் ஒரு ஓட்டத்துக்கு மேல் பெற முடியவில்லை.

அவ் அணியின் பின் வரிசை ஆட்டக்காரர்களே ஓரளவு தாக்குப் பிடித்து ஆடி அணியின் கௌரவத்தைக் காப்பாற்றினர்.

இந்த நிலையில் எஞ்சியுள்ள இரண்டு போட்டிகளில் ஒன்றையாவது வென்றாக வேண்டிய நிலைக்கு நியூசிலாந்து அணி தள்ளப்பட்டுள்ளது.

ஏனெனில் ஒரு நாள் தரவரிசையில் அவுஸ்திரேலியாவுக்கு அடுத்த நிலையில் உள்ள நியூசிலாந்து ஒரு போட்டியிலேனும் வெற்றி பெற்றாலே அதைத் தக்க வைக்க முடியும்.

இல்லையேல் தன்னிடம் உள்ள ஒரு புள்ளியை இழந்து பின் தள்ளப்படும் நிலை உருவாகும் .

எனவே அவுஸ்திரேலிய அணி வீழ்த்தப்பட முடியாத அணி என்பது மீண்டும் ஒரு முறை நிருபணமாகியுள்ளது.

அவ் அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹெய்டன் சொந்த மண்ணில் சோபிக்கத் தவறியதால் அணியிலிருந்து நீக்கப்பட்டார். ஆதலால் அந்த அணி பலவீனமான நிலையை எதிர்நோக்கிச் செல்கிறது என்ற கருத்தும் நிலவியது.

இது ஒரு வகையில் அவுஸ்திரேலிய அணிக்கு அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கலாம். ஏனெனில் நியூசிலாந்தின் அண்மைக்கால பெறுபேறுகள் பிரமாண்டமானதாகவே இருந்தது.

ஆனால் அனுபவத்தின் முதிர்ச்சி மீண்டும் ஹெய்டனை இணைத்தது. அவராலேயே வெற்றியும் பெற்றது அவுஸ் திரேலியா. முதலாவது போட்டியில் அவர் பெற்ற 75 ஓட்டங்களும் இரண்டாவது போட்டியில் பெற்ற சதமும் நியூ சிலாந்தை மண்டியிடச் செய்தது.

இதற்கும் மேலாக நம்பிக்கை பந்து வீச்சாளர் மெக்ராத் அவுஸ்திரேலிய அணிக்கு நாகாஸ்திரம் போன்றவர்.

இப்படியாக அனைவரும் பிரமிக்கும் வகையில் கட்டி யெழுப்பப்பட்டுள்ள அவுஸ்திரேலினய அணியை வீழ்த்துவோம் என்பவர்களின் கனவு எவரெஸ்டை எட்டும் கடினம்மிக்க முயற்சியாகவே இருக்கும். □

## முடிவுக்கு வந்த மோதல்

பிரேசில் நாட்டு முன்னாள் கால்பந் தாட்ட நட்சத்திரங்களான எடிசன் பேலே வுக்கும், றோமாரியோ டிசுசாவுக்கும் இடையே ஏற்பட்ட பனிப்போர் தற்போது முடிவுக்கு வந்து விட்டது.

ஒரு முறை பேலே, றோமாரியோவைப் பார்த்து அவருக்குவயதாகி விட்டது. விரைவாகப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுமாறு பகிரங்கமாகக் கூறினார்.

கோபமடைந்த றோமாரியோ வாயைப் பொத்திக் கொண்டு உமது வேலையைப் பார் என்று கூறியதால் இருவருக்குமிடை யில் வாக்குவாதம் ஏற்பட்டது.

எனினும் 38 வயதான றோமாரியோ பின்னர் தனது தவறை உணர்ந்து பேலேயிடம் மன்னிப்புக் கோரினார். இதனையடுத்து அவர்களிருவரிடமும்



நடைபெற்ற பனிப்போர் முடிவுக்கு வந்துள் ளது. இருவருமே பிரேசில் அணி வீரர் களாக இருக்கின்ற போதும் றொமாரி யோவைப் பார்க்கிலும், பேலே உலகின் தலைசிறந்த வீரராகப் போற்றப்படுபவர். அவருக்கு நிகராக உலகத்தில் இது வரை எவருமே தோன்ற வில்லை அப்படியான வரலாறும் இது வரை இல்லை. அவருக்கு நிகராக ஆர்ஜன் டீனாவின் மரடோனா பேசப்பட்ட போதும் அது நிராகரிக்கப் பட்டது.

அடிமட்ட வறிய குடும்பத்தில் பிறந்த வரான பேலே பிரேசில் அணிக்காக பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்ததுடன் தனது கால்பந்து வாழ்க்கையில் பந்துடன் பேச முடியாது போனதே கால்பந்தில் தான் ஈட்ட முடியாத குறை என்கிறார். இப்பேற் பட்ட வீரர் சக நாட்டு வீரர் ஒருவருடன் மோத லில் ஈடுபடுவதென்பது அவரது நற்பெய ருக்கே களங்கம்.

வடிவேல்

## விசேட விலைக்கழிவு

எமது நிறுவனத்தில் ஒரே தடவையில்

பெருமளவு புகைப்படச் சுருள்களை

பிரதி ஆக்கம் செய்வோருக்கு



~~4R-12.50~~ 4R-8.75

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**

யாழ்வீதி, மானிப்பாய்.

T.P: Fax:-021-222-2884

(சி-11512)


# பாதாள உலகக்குழுக்களை முடக்க இன்ரபோல் உதவியை சிறிலங்கா நாடுகிறது

இலங்கையில் செயற்படும் முக்கிய பாதாள உலக குழுக்களின் தலைவர்கள் நால்வரைக் கைது செய்வதற்கு சர்வதேச பொலிசாரான இன்ரபோலின் உதவியை சிறிலங்கா அரசாங்கம் நாடியுள்ளது. பாதாள உலகக் குழுக்களுக்கு எதிராக சிறிலங்காப் பொலிஸ் விசேட பிரிவு அண்மையில் மேற்கொண்ட கடும் நடவடிக்கைகளில் பல பாதாள உலகக்குழு முக்கியஸ்தர்கள் கொல்லப்பட்டும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும். பொலிசாரின் நடவடிக்கைகளால் முக்கிய தலைவர்கள் சிலர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகவும் இவர்களைக் கைது செய்வதற்கே இன்ரபோலின் உதவி நாடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. இந்தியாவிலும், இத்தாலியிலும் இவர்கள் தலைமறைவாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதேவேளை பொலிசாரின் இந்த நடவடிக்கையினை உடனடியாக நிறுத்துமாறு பாதாள உலகக் குழுக்களுடன் நெருக்கமான தொடர்புகளைப்பேணிவரும் ஆளும் தரப்பு மற்றும் எதிரணி அரசியல் வாதிகள் அரசாங்கத்தை வலியுறுத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)


## மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து) வாக்காளர் இடாப்பு மூடுதல்

31.03.2005 ஆம் திகதி சங்கத்தின் 09 கிளைகளினதும் வாக்காளர் இடாப்பு மூடப்படுகின்றது. இத்திகதிக்கு முன்னர் ஏற்கனவே பங்குப்பணத்தைச் செலுத்தித் தம்மை முழு அங்கத்தவர் ஆக்கிக்கொள்ளாதவர்கள், குறித்த திகதிக்கு முன்னர் நிலுவைகளைச் செலுத்தி அங்கத்துவத்தைப் பூரணப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்.

(சி.11528)



## வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி வலயத்திலிருந்து முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்கும் திரு. ப. அரியரத்தினம் அவர்களை வாழ்த்துகின்றோம். கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையேற்கும் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.த. குருகுலராஜா அவர்களை வரவேற்கின்றோம்.



திரு. ப. அரியரத்தினம்

இன்புறு கல்வியில்
இதுவரை நாள்
பணியில் செம்மைகள்
பலவாற்றிக் - கிளி
நொச்சி தன்பதி பிரிந்து
முல்லையில் ஏறும்
முதல்வரரியரத்தினத்திற்கும

நன்றிகள் சூடும்
நாமினிதே வந்திடும்
வலய முதல்வர்
குருகுலராஜாவை
வருக வருகவென
உரைப் பதிலானந்தம்
வரவில் பொழிக
மண்ணில் கல்விப் புதுமை.



திரு. த. குருகுலராஜா

சிற்றூழியர்
வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி

(சி-11529)



## 11 ஆவது ஆண்டில் பூநகரிநகரில்...

01.03.2005 முதல்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

வைப்புத் திட்டங்கள்

- சேமிப்பு வைப்புக்கள்
- நிலையான வைப்புக்கள்

கடன் திட்டங்கள்

- தங்க அடைவுக் கடன்
- ஏனைய கடன் வாய்ப்புகள்

# தமிழீழ வைப்பகம்

மேலும் பல பணிகள்

வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்

**தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்**

(சி-11366)

## இவரைக் காணவில்லை



*மானிப்பாயைச் சேர்ந்தவரான*

**செல்வி மனோகரன் மேரிவேயினா**

**(விஜிதா)**

என்பவரை கடந்த 22.02.2005 முதல் காண வில்லை. மானிப்பாய் மகளிர் கல்லூரிக் குச் சென்ற இவர். ஒரு தொப்பியும் காற்சங்கிலியும் அணிந்திருந்தார்.

அமைதியும், சாந்தசுபாவமும் கொண்ட இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல் தரவும்.

*சதாசிவம் லிங்கேஸ்வரன்*
*டச்சு றோட்,*
*மானிப்பாய்.*

தகவல்
(சி.11369) **தாய:- ம.தேவமனோகரி.**

## பெயர் மாற்றம்

தங்கத்துரை கோணேஸ்வரன் ஆகிய யான், எனது மகன் கோ. துலக்சன் (வயது 02) எனப் பெயர் இடப்பட்டது. 20.12.2004 ஆம் திகதி தொடக்கம் அவரின் பெயரை கோணேஸ்வரன் விதுர்ஷனன் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என இத்தால் பிரசுரம் செய்கிறேன்.

(5754)

தகவல்:-
த.கோணேஸ்வரன்,
ஸ்கந்தபுரம், அக்கராயன் குளம்.

## சேவை நயந்து பாராட்டும் வாழ்த்தும்.......

கிளிநொச்சி மண்ணில்புதல்வனாய்ப் பிறப்பெடுத்து இம் மண்ணின் கல்வியியல் செயற்பாட்டுக்கு அர்த்தம் கொடுத்து, அதற்கு செழுமையும், பெருமையும் சேர்த்தவரும் நல்லறி வாளர்களை எம் மண்ணுக்கு அறுவடையாக்கிய வல்லோனும், தேசப்பற்றோடும், மக்களின் உணர்வோடும் ஒன்றித்து உழைத்த உத்தமர்.

*உயர்திரு*
*பசுபதி அரியரத்தினம் அவர்கள்*
*வலயக்கல்விப் பணிப்பாளர்.*

இடம்மாற்றலாகிச் செல்லும் இவ்வேளை அவர் எமது கிளி நொச்சி மண்ணுக்கு ஆற்றிய அர்ப்பணிப்பு மிகு சேவையை எமது மாவட்ட மக்களாகிய நாம் நயந்து பாராட்டுகின்றோம்.

தேசிய எழுச்சிப் பேரவை,
கிளிநொச்சி மாவட்டம்.
(சி.11530)

---

**இன்று**
**பூநகரி மண்ணில்**
**தமது பதினொராவது**
**கிளையினை**
**ஆரம்பிக்கும் தமிழீழ**
**வைப்பகத்தினை**

**ஈழநாதம்**

**வாழ்த்துகின்றது.**

---

**இன்று**
**பூநகரி மண்ணில்**
**தமது பணியைத்தொடங்கும்**
**தமிழரின் காப்பகமாம்**
**தமிழீழ வைப்பகத்திற்கு**
**எமது**
**வாழ்த்துக்கள்**

**வேலழகன்**
**பல்பொருள்**
**கடற்றொழில்**
**உபகரண வாணிபம்**
பள்ளிக்குடா, பூநகரி. (சி-11525)

**செல்வரசி**
**புடைவையகம்**
வாடியடி, பூநகரி. (சி-11526)

**தெய்வத்தாய்**
**களஞ்சியம்**
**(ஞானம்ஸ்)**
வாடியடி, பூநகரி. (சி-11524)

**இன்னரசி**
**குளிரகம்**
வாடியடி, பூநகரி. (சி-11527)

---

## 33 வருட கால மக்கள் சேவையில்
## எமது சங்கத்தின் சேவைகள்

நுகர்ச்சிச் சேவை
ஒப்பந்த வேலைகள்
எரிபொருள் விநியோகம்
உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு, விற்பனை
(நெல், மிளகாய், கச்சான்)
அரிசி உற்பத்தி விற்பனை
உலருணவு நிவாரண விநியோகம்
உலக உணவுத் திட்ட நிவாரண விநியோகம்
கிராமிய வங்கிச் சேவை
சேமிப்பு
கடன் வழங்கல்
கனரகம் :- கட்டட மூலப் பொருள் விநியோகம்
விவசாய உள்ளீடுகள் (உரம்) விநியோகம்

முன்னணி வகிக்கும் எமது பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்-இன்று 01-03-2005இல் பூநகரிப் பிரதேசத்தில் புதிய கிளையினை நிறுவி -எம்மக்களின் வளமான வாழ்விற்கு வழிசமைக்கும் எமது தேசத்தின் வங்கியான தமிழீழ வைப்பகம் - செழித்து வளர வாழ்த்துகிறது.

**உறுப்பினர்கள், பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்,**
**பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**வாடியடி, பூநகரி.**

(சி-11523)

## பொண்டிங் விலகினார்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. ஐந்து ஒருநாள் போட்டித் தொடரில் முதல் மூன்று போட்டியில் அவுஸ்திரேலியா வென்று தொடரைக் கைப்பற்றியது.


இரு அணிகள் மோதும் நான்காவது போட்டி வெலிங்டனில் இன்று நடக்கிறது. காயம் காரணமாக அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் இன்றைய போட்டியில் விளையாடவில்லை. இதேபோல ஹைடனும் இடம்பெறவில்லை. நான்காவது போட்டிக்கான அவுஸ்திரேலிய அணி வருமாறு:- கில்கிறிஸ்ட் (தலைவர்) மார்ட்டின், சைமண்ட்ஸ், மைக்கேல் கிளார்க், காடிச், ஹுசே, ஜேம்ஸ், ஹோப்ஸ், பெரட்லி, கிளெஸ்பி, கஸ்பரோவிச், மெக்ராத்.

# ஸ்சிமித், கெம்ப் அதிரடித் துடுப்பாட்டம் தொடரைக் கைப்பற்றியது தென்னாபிரிக்கா



இரண்டாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி சிம்பாவ்வேயை 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி, தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள சிம்பாவ்வே அணி மூன்று ஒருநாள்,இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது. நேற்று முன்தினம் இரண்டாவது போட்டி டர்பனில் நடந்தது. தென்னாபிரிக்க அணியில் போலக், நிடினிக்கு ஓய்வு வழங்கப்பட்டது. நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே களத்தடுப்பை தேர்வு செய்தது. அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அணித்தலைவர் ஸ்சிமித் சதம் அடித்தார். இவர் நான்கு சிக்ஸர், ஐந்து பவுண்டரிகளுடன் 117 ஓட்டங்கள் விளாசினார். கிப்ஸ் 75 ஓட்டங்கள் எடுத்தார். கடைசிக் கட்டத்தில் கெம்ப் அதிரடியாக 19 பந்துகளில் அரைச்சத்தை எட்டிச் சாதித்தார். ஐந்து சிக்ஸர் இரண்டு பவுண்டரி அடித்த கெம்ப் ஆட்டமிழக்காமல் இருக்க, தென்னாபிரிக்க அணி ஆறு விக்கெட் இழப்புக்கு 329 ஓட்டங்கள் குவித்தது. சிம்பாப்வே தரப்பில் மபோபு மூன்று விக்கெட் வீழ்த்தினார். அடுத்து களமிறங்கிய சிம்பாப்வே அணி 50 ஓவரில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 198 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது.



# விளையாட்டு

## சுனாமி கிரிக்கெட் ரத்து

சுனாமி நிவாரண நிதிக்காக ஆசிய 11பேர், உலக 11பேர், அணிகள் மோதும் இரண்டாவது போட்டி கொல்கத்தாவில் ஏப்ரல் மாதம் நடைபெற இருந்தது. தற்போது இந்தப் போட்டி ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதை ஆசிய கிரிக்கெட் சபைத் தலைவர் டால்மியா தெரிவித்தார். அவர் கூறும் போது, ஏப்ரல் மத்தியில் கடுமையான வெயில் இருக்கும் இது போட்டி நடத்த உகந்தது இல்லை என்பதால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றார்.

முதலில் இந்தப் போட்டி கடந்த 13 ஆம் திகதி நடைபெற இருந்தது. முன்னணி வீரர்கள் பங்கேற்க முடியாததால் ஏப்ரலுக்கு தள்ளி வைக்கப்பட்டது. தற்போது இந்தப் போட்டி ரத்தாகியுள்ளது. முதல் போட்டி சனவரி 10 ஆம் திகதி மெல்பேர்னில் நடந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரிமியர் லீக் கால்பந்துத் தொடர் மான்செஸ்டர் யுனைட்டட் வெற்றி



பிரிமியர் லீக் கால்பந்து போட்டியில் மான்செஸ்டர் யுனைடட், போர்ட்ஸ்மவுத் அணியை வீழ்த்தியது.

முன்னணி கழகஅணிகள் பங்கேற்கும் இங்கிலீஷ் பிரிமியர் லீக் கால்பந்து தொடர் இங்கிலாந்தின் பல்வேறு இடங்களிலும் நடக்கிறது. ஓல்ட்டிராபோர்ட் நகரில் கடந்த வெள்ளியன்றுநடந்த லீக் போட்டியில் மான்செஸ்டர் யுனைட்டட், போர்ஸ்மவுத் அணிகள் மோதின. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் மான்செஸ்டர் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.. அணியின் இளம் வீரரான வெய்ன் ரூனே இரண்டு கோல் அடித்து அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாகத் திகழ்ந்தார். மற்றொரு போட்டியில் அர்செனல் 0-2 என்ற கோல் கணக்கில் சவுத்தாம்ப்டன் அணியுடன் அதிர்ச்சித்தோல்வி அடைந்தது.

## வெற்றிதோல்வியின்றி நிறைவுபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட்போட்டி

தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குமிடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான தோல்பந்து துடுப்பாட்டப் போட்டி சமநிலையில் முடிவுற்றுள்ளது.

மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இவ்வாட்டத்தில் மகாஜனாக் கல்லூரி அனைத்து இலக்குகளையும் இழந்து 207ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் ஆகக் கூடிய ஓட்டங்களாக ஜெயப்பிரியந்தன் 69, மயூரன் 37. ரவிகாந் 33 எனப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ். இந்துக்கல்லூரி வீரர்களான தீனதக்சன் 15 பந்து பரிமாறங்களில்நான்கு ஓட்ட மற்ற பந்து பரிமாற்றங்களுடன் 40 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், அருண்குமார் 12.4 பந்துப் பரிமாற்றங்களில் மூன்று ஓட்டமற்ற பந்து பரிமாற்றங்களுடன் 37 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 155 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் தர்சன் 46 ஓட்டங்களையும், ஜனார்த்தன் 25 ஓட்டங்களையும் அருண்குமார் 23 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த புவனேசன் 11 பந்து பரிமாற்றங்களில் நான்கு ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுடன் 31 ஓட்டங்களுக்கு ஐந்து இலக்குகளையும், ரஜீவ் 3-2 பந்து பரிமாற்றங்களுக்கு பத்து ஓட்டங்களைக் கொடுத்து மூன்று இலக்குகளையும், தீலிபன் பத்துப் பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுடன் 33 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்சில் மகாஜனாக் கல்லூரி ஒன்பது இலக்குகளை இழந்து 119 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்ட நேரம் முடிவடைந்தது.

இதில் தனஞ்செயன் 39 ஓட்டங்களையும், ரவிசாந் 28 ஓட்டங்களையும், ஜீவசங்கர் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

யாழ். இந்துக்கல்லூரி வீரர்களான ஜனார்த்தன் 11 பந்து பரிமாற்றங்களுக்கு 17 ஓட்டங்களைக்கொடுத்து மூன்று இலக்குகளையும், தீனதக்சன் ஏழு பந்துப் பரிமாற்றங்களில் ஒரு ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றத்துடன் 37 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு இலக்குகளையும் மற்றும் கேமகுமார், உமாதரன் ஆகியோர் முறையே 19,20 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒவ்வொரு இலக்குகளைக் கைப்பற்றினர்.. (41)



வடக்கு பிரான்ஸில் சனிக்கிழமை நடைபெற்ற லீவின் உள்ளரங்க தடகளப் போட்டியில் கம்பு ஊன்றித் தாண்டும் போட்டியில் (போல்வால்ட்) புதிய உள்ளரங்க உலக சாதனை புரிந்த ரஷ்யாவின் யெலீனா இஸன்பயேவா. இவர் 4.89 மீற்றர் உயரம் தாண்டினார். ஒலிம்பிக் சம்பியனான இஸன்பயேவா எட்டு ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் 4.88 மீற்றர் தாண்டியதே முந்தைய சாதனையாகும்.

## இல்ல மெய்வன்மை போட்டி

கிளி/பிரமந்தனாறு ம.வி.வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி கடந்த மாதம் 25 ஆம் திகதி அதிபர் க.ச.சிவலிங்கம் தலைமையில் பி.ப.2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.போட்டியின் இறுதியில் 682 புள்ளிகளைப் பெற்று மஞ்சள் நிறத்தைக் கொண்ட மலைமகள் இல்லம் முதலாம் இடத்தையும் 618 புள்ளிகளைப் பெற்று பச்சை நிறத்தையுடைய கலைமகள் இல்லம் இரண்டாம் இடத்தையும் 583 புள்ளிகளைப் பெற்று நீலநிறத்தையுடைய அலைமகள் இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன. (14)

## பரிசளிப்பு விழா

கிளி/முரசுமோட்டை முருகானந்தா ம.வி. 2004ஆம் ஆண்டு கல்வி, விளையாட்டுத்துறைகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான வருடாந்தப் பரிசளிப்புவிழா கடந்த 25ஆம் திகதி பி.ப.4.00 மணிக்கு வித்தியாலய வளாகத்தில் அதிபர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக கிளி/ மாவட்ட கல்வி கழகப் பொறுப்பாளர் வே.ஜீவராஜ், கண்டாவளை கோட்டக்கல்விப்பணிப்பாளர் வீ. இராஜகுலசிங்கம் கிளி/ மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர், எழிலன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். அடுத்து மாணவர்களுக்கான பரிசில்களை கிளி/ மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கரைச்சி பிறப்பு,இறப்பு பதிவாளர் மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப் பாளர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (14)

## சினேகபூர்வ கிரிக்கெட் போட்டி கிளி–கனகபுரம் அணி வெற்றிபெற்றது

கிருஸ்ணபாரதி நியூஸ்ரார் அணிகளுடனான சினேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் கிளி.கனகபுரம் அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் கனகபுரம் வி.க.மைதானத்தில் நடைபெற்ற 15 ஓவர்கள் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கனகபுரம் அணி 15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கனகபுரம் அணியின் சார்பாக குலரமணன் 16, சுயன் 11, கிஸ்ணவேள் 10 என கூடுதல் ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கிருஸ்ணபாரதி அணிசார்பாக கொலம்சன்4, கணேஸ் 2, குகன், றொசான், சின்னவன் ஆகியோர்தலாஒருவிக்கெட்டினையும் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிருஸ்ணபாரதி அணி 15 ஓவர் நிறைவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களை மட்டுமே பெற்றது அவ் அணி சார்பாக குகன் 14, றொசான் 13, எனக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கனகபுரம் சார்பாக குலரமணன் மூன்று,அலன் இரண்டு,கண்டீபன் இரண்டு, சுரேஸ்ஒன்றும் என விக்கட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி ஓவர் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 60 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அவ் அணி சார்பாக சுந்தரலிங்கம் 10 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றார். கனகபுரம் அணிசார்பாகப் பந்து வீச்சில் அலன் ஐந்து , சுயன் இரண்டு காண்டீ, குலரமணன், சுரேஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனகபுரம் அணி 10 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில் அணி சார்பாக காண்டீ 21, சுரேஸ் 18 குலரமணன்15, முகுந்தன் 13, எனக் கூடுதலாக ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நியூஸ்ரார் சார்பாக றேமன், குகன், கோபி, கஸ்ரோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## துணுக்காய் பிரதேச வி.கழகங்கள் புதிய தெரிவினை மேற்கொள்க

துணுக்காயப் பிரதேச செயலகத்தில் கடந்த எட்டாம் திகதி நடைபெற்ற விளையாட்டு கழகங்களுக்கான பொதுக் கூட்டத்தில் பங்கு பற்றாத விளையாட்டுக் கழகங்கள் விளையாட்டு உத்தியோகத்தருடன் அல்லது கழகம் சார்ந்த கிராமஉத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு ஆண்டுப் பொது கூட்டத்தினையும் புதிய நிர்வாத் தெரிவையும் நிதிச் செயற்பாட்டையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். தவறும் பட்சத்தில் இவ் வருடம் நடைபெறவுள்ள பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்ற முடியாது என்பதனை துணுக்காய்ப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவிக்கின்றார். (24)

## யோகபுரம் மகாவித்தியாலய இல்ல மெய்வன்மை போட்டி

துணுக்காய் வலய மு/யோகபுரம் மகாவித்தியாலய வருடாந்த மெய்வன்மைவிளையாட்டுப் போட்டி நிகழ்வு யோகபுரம் விளையாட்டு மைதானத்தில் கடந்த 17 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்வில் இலக்குமி இல்லம் முதலாம் இடத்தையும் பார்வதி இல்லம் இரண்டாம் இடத்தையும் சரஸ்வதி இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. இந்நிகழ்வில் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், பெற்றோர்கள், பொது மக்கள், நலன் விரும்பிகள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (24)

## சிந்தனைக்கு



மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 01-03-2005
தொலைபேசி 060-2213244 மின் அஞ்சல்
தொலைநகல் 021-2283948 natham 23 ela @ yahoo. com

# மீண்டெழுதல்?

வடக்கு-கிழக்கிலுள்ள மக்களின் முக்கிய பொருளாதார நடவடிக்கையில் ஒன்றாகிய மீன்பிடித் தொழில் இனி மீண்டெழ முடியுமா? இன்று இக்கேள்வி முதன்மை பெற்றதொன்றாகியுள்ளது. ஏனெனில், இன்று அத்தொழில் நடவடிக்கை எதிர்நோக்கியுள்ள சவால்கள் அத்தனை தூரம் பாரியதாகவும், நெருக்கடி மிக்கதாகவும் உள்ளது.

வடக்கு-கிழக்கில் சுமார் இரண்டு தசாப்த காலம் நீடித்த யுத்தமும், இலங்கையின் வரலாற்றில் என்றும் நிகழாத சுனாமியின் தாக்கமும் மீன்பிடித் துறையை பாதித்தது போன்று - அதாவது, சீரழித்தது போன்று - வேறு எந்தத் துறையையும் சீரழித்தது என்று கூறுவதற்கு இல்லை. இப்பொருளாதார நடவடிக்கையை நம்பியுள்ள இலட்சக்கணக்கான மக்களின் ஜீவனோபாயத்தையே கேள்விக்குள்ளாக்கும் வகையில், யுத்தமும், சுனாமியும் பாதிப்புக்களை விளைவித்துள்ளன.

சுமார் இருபது வருடங்கள் நீடித்த யுத்தத்தின் பின்னர் 2002இல் கைச்சாத்தாகிய யுத்த நிறுத்த உடன்பாடானது முழு அளவில் இல்லாதுவிடினும், சிறிதளவாயினும், மீன்பிடித் தொழிலுக்குப் புத்துயிர்ப்பு அளிக்கலாம் என மக்கள் மனங்களில் எழுந்த நம்பிக்கையை கடந்த ஆண்டின் இறுதியில் தாக்கிய சுனாமி இல்லாதொழித்துவிட்டது போல் உள்ளது.

யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்பட்ட பின்னர் சிறிலங்கா ஆயுதப் படையினரால் அமுல்படுத்தப்பட்டு வந்த கடல் வலயத் தடுப்புச் சட்டம் மற்றும் மீனவர்கள் மீதான கெடுபிடிகள் சற்றுத் தளர்த்தப்பட்டன. இந்நிலையானது, மீன்பிடித் தொழில் சற்று புத்துயிர் பெற வாய்ப்பாகியது. ஆனால், சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பு எவ்வாறு உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தில் விட்டுக் கொடுப்பின்றி உள்ளதோ, அதேபோன்று மீன்பிடி நடவடிக்கைகளிலும் பெரியளவில் அது விட்டுக்கொடுப்புக்களைச் செய்யத் தயராக இருக்கவில்லை.

ஆனால், மீன்பிடி பல இலட்சம் மக்களின் ஜீவனோபாயத்துடன் தொடர்புடையதாகையால், சமாதான காலத்தில் சில தளர்வுகளை அது செய்ய வேண்டியதாகவே இருந்தது. ஆயினும், கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடித்தொழிலாளர்களுக்கும், சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டவண்ணமே இருந்தது.

இதன் காரணமாக ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இத்தொழில் நடவடிக்கை இடம்பெற்றதெனலாம். இந்நிலையில், சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்பு இச்சமூகத்தினரை முற்றிலுமாகவே பெரும் துயருக்கும், இழப்பிற்கும் உள்ளாக்கியுள்ளது. சதாரண நிலையே காணப்படினும் கூட இதில் இருந்து அவர்கள் மீண்டு வருதல் என்பது மிகப்பெரும் சவால் நிறைந்ததொன்றாகவே இருக்கும்.

இத்தகையதொரு நிலையிலும், சிறிலங்கா அரசாங்கமும், அதன் ஆயுதப் படைத் தரப்பும் இச்சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளவே முற்பட்டு நிற்பதாகத் தெரிகின்றது. அதாவது, தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகளை அதிகரிக்கவும், அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளை முடக்கவும் அவை முற்பட்டு நிற்கின்றன.

சுனாமி தாக்கிய அதிர்ச்சியில் இருந்து மக்கள் மீண்டுவரும் முன்னரே சிறிலங்கா இராணுவம் மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டது. பாதுகாப்பு ஏற்பாடு என்ற ரீதியில் சுனாமிக்கு முன்பிருந்த இடையூறுகளும் நீங்கியதாக கரையோரப் பாதுகாப்பு வேலிகளை அது அமைத்துக் கொண்டது.

அது மட்டுமன்றி, மக்கள் அழிவிலிருந்து மீண்டெழுவதற்காக மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்கும் இராணுவத்தினர் தடைவிதிப்பவர்களாகவும், முட்டுக்கட்டை போடுபவர்களாகவும் உள்ளனர். குறிப்பாக, மீன்பிடித்துறைமுகங்களைச் சீரமைத்தல், படகுகளை கரையோரத்திற்குக் கொண்டு வருதற்காகக் கரைகளை ஆழப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கும் இராணுவம் இடையூறு விளைவிப்பதாகவுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, சிறிலங்கா அரசும் சரி, அரச சார்பற்ற நிறுவனங்களும் சரி வடக்கு-கிழக்கில் குறிப்பாகத் தமிழ் மக்கள் மீண்டும் மீன்பிடித் தொழிலை ஆரம்பிப்பதற்கான எந்த உதவிகளையும் அவை செய்யவில்லை என கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் கவலை வெளியிட்டுள்ளன. அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் அறிவிப்புக்களை வெளியிடுகின்றனவே ஒழிய உதவி புரிபவையாக இல்லையெனவும் அவை தெரிவிக்கின்றன.

இத்தகைய நிலையில், வடக்கு-கிழக்கில் மீனவர்கள் என்றுமில்லாதவாறு பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளனர். சுனாமி அனர்த்தத்தின் பின்பும் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள், இயற்கை அனர்த்தம் கூட அவர்களின் நிலையை மாற்றவில்லை. ஒடுக்குமுறையாளர்கள் தமது செயற்பாட்டைத் தொடரவே முற்பட்டு நிற்கின்றனர். ஆகையினால், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மீன்பிடித்தொழிலின் எதிர்காலம் முற்றிலுமாக இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தப்பட்டதாகவே உறுதி செய்யப்படுவதானதாகவுள்ளது.

# முல்லை.மாவட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமனம் பெற்றோர்

புதுக்குடியிருப்பு தமிழ் மொழி மூல அரசாங்கப் பாடசாலைகளுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3II வகுப்பைச் சேர்ந்த தமிழ் மொழி மூல ஆட்சேர்ப்பில் முல்லை மாவட்டத்திற்கு நியமனம் பெற்றோர் விபரம் வெளிவந்துள்ளது. இவ்விபரங்கள் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

செல்வி.இராசாமணி. சுதர்சினி மு/வற்றாப்பளை மகா/வி (நடனம்), சதாசிவம். திருச்செந்தூரன். மு/கலைமகள் வித்தியாலயம் (நடனம்), செல்வி வசந்தராசா. இன்பநிதி மு/மகா.வி. (நடனம்), செல்வி பற்குணராசா ஜீவாஜினி. மு/தண்ணீர் ஊற்று இந்து சபை த.க.பாடசாலை (நடனம்), வரதலிங்கம்.ரமணசுதன் மு/மகா.வி. (உ.ந.ஒ.தொ.நு), சிங்கராசா அல்பன் வசந்தரூபன் இரணைப்பாலை. றோ.க.த.பா. (உ.ந.ஒ.தொ.நு), பாக்கியநாதன் கமலக்கண்ணன். வள்ளிபுனம் கனிஷ்ரா. வித்தியாலயம். (உ.ந.ஒ.தொ.நு)*, செல்வி. நடராசா. நந்தினி விசுவமடு மகா/வி. (உ.ந.உ.தொ.நு)*, அருளானந்தம். அருள்ஜெயரட்ணம். செம்மலை மகா/வி (உ.ந.ஒ.தொ.நு)*, திருமதி. சந்திரமோகன். ஜெகதீஸ்வரி. உடையார்கட்டு மகா/வி (உ.ந.ஒ.தொ.நு)*, சின்னையா முத்துக்குமார். குமுழமுனை. மகா/வி. (சித்திரம்), சிவபாத சேகரம். கோபாலன் செம்மலை மகா/வி. (சித்திரம்), தனபாலசிங்கம். ராதாகிருஸ்ணன். விசுவமடு.மகா/வி. (உடற்கல்வி),14) அழகர்சாமி. தம்பிராசா. உடையார்கட்டு.மகா/வி (உடற்கல்வி), விக்னேஸ்வரன் பாலசேந்தன். வள்ளிபுனம். அ.த.க.பா. (உடற்கல்வி), கனகரத்தினம். சசிக்குமார். இரணைப்பாலை. அ.த.க.பா (உடற்கல்வி), நவராசா சிங்கம். சுரேஸ்குமார். பாரதி. வித்தியாலயம் (உடற்கல்வி), பாலசுந்தரம். ஜெயரூபன். கலைமகள் வி. (உடற்கல்வி), முத்தையா. காந்தசெல்வன். குமுழமுனை மகா/வி. (உடற்கல்வி), பொன்னம்பலம். ரஜிந்தன் செம்மலை மகா/வி (உடற்கல்வி), சின்னத்துரை. வசந்தகுமார் புது/றோ.க.த.பாடசாலை (உடற்கல்வி), ஜெயலிங்கம் ஜெயக்காந்த் சீ.சி.வி. (உடற்கல்வி), சரவணை. சுவேந்திரன். விக்னேஸ்வரா வித்தியாலயம் (உடற்கல்வி), சுந்தரலிங்கம். கயேந்திரன் முள்ளியவளை தமிழ்.வி.(உடற்கல்வி), சுப்பிரமணியம். சிறிதரன் செம்மலை மகா/வி (உடற்கல்வி), பாலேந்திரன் சசிகரன் முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க. (உடற்கல்வி), விநாயக மூர்த்தி. ஐங்கரன் அம்பலவன் பொக்கனை மகா/வி (உடற்கல்வி), ஸ்ரனிற்லாஸ். டிலோஜினி. முள்ளியவாய்க்கால் மேற்கு அ.த.க. (சங்கீதம்), தர்மலிங்கம் ஜெயசூரியா உடுப்புக்குளம் தமிழ்.வி. (சிங்கீதம்), இராமநாதன். றமேஸ் குமுழமுனை மகா/வி (கணிதம்), அன்ரனி. கிறேசியன். புஸ்பராசா குமுழமுனை மகா/வி (கணிதம்), அமிர்தலிங்கம்.வட்சலன். குமுழமுனை மகா/வி (கணிதம்) ரங்க நாதன் பகீரதி முல்லை. மகா/வி, (கணிதம்) செல்வராசா (ஜெய சீலன் விசுவமடு மகா/வி (கணிதம்), செல்லையா. ஜெய ராசா. கலைமகள் வித்தியாலயம் (கணிதம்), இரத்தினம்.றமணி உடையார்கட்டு மகா./வி (கணிதம்), தர்மகுலம் சுமன் முல்லை. றோ.க.தா. பாடசாலை (கணிதம்), சுந்தரம் (ஜெகதீசன் வற்றாப்பளை மகா/வி (கணிதம்), சிவதாஸ் பிரசாத் புது மகா/வி (கணிதம்), சதா சிவம். வசீதரன். வற்றாப்பளை மகா/வி (விஞ்ஞானம்), பரமசர்மி. நிசாயினி இரணைப்பாலை மகா/வி. (விஞ்ஞானம்), செல்வி. மதுப்பிரியா. பிரபாகரன். சிலாவத்தை தமிழ். வி (ஆரம்பக் கல்வி)*, கணேசமூர்த்தி உதயசீலன் சுதந்திரபுரம். அ.த.க.பா (ஆரம்பக்கல்வி)*, சிவகுரு இரத்தினஜோதி செம்மலை. மகா/வி. (ஆரம்பக் கலவி)*, செபஸ்டியாம்பிள்ளை. அன்ரனி ஜோர்ஜ் கலைமகள் வித்தியாலயம் (ஆரம்பக்கல்வி)*, மணியம் கந்தரூபன் தேவிபுரம் அ.த.க.பா.(ஆரம்பக்கல்வி)*, செல்வராசா. மதனரூபன். இரணைப்பாலை மகா/வி (ஆரம்பக்கல்வி)*, சின்னையா. இராசரத்தினம் குரவில் தமிழ்.வி. (ஆரம்பக் கல்வி)* , திருமதி வசந்தமலர் பாலசுபிரமணியம். தண்ணீர் ஊற்று பாடசாலை.(ஆரம்பக்கல்வி)*, சிறில் அன்ரன் ஜெயராஜ் அம்பலவன் பொக்கனை மகா/வி (ஆங்கிலம்), மலர்ச் செல்வி கோபாலசிங்கம் கொக்குளாய் அ.த.க. (ஆங்கிலம்), ஜெயந்தி இலங்கைநாதன் ஸ்ரீசுப்பிரமணிய வி.(ஆங்கிலம்), ஜேசுதாசன். பிறேமதாஸ் கொக்குத் தொடுவாய் அ.த.க. (ஆங்கிலம்) (08)

# மாகாண சபையிலுள்ள வெற்றிடங்களுக்கு மத்திய அரசு நியமனங்களைச் செய்ய முடியாது

## -முதலமைச்சர்கள் மாநாட்டில் முடிவு

மாகாண சபைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு மத்திய அரசாங்கம் நியமனங்களை மேற்கொள்ள முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நியமனங்களை மறுப்பதற்கு முதலமைச்சர்கள் முடிவெடுத்துள்ளதாக தெரியவருகிறது. கடந்த சனி இரத்தினபுரியில் இடம்பெற்ற முதலமைச்சர்களின் மாநாட்டில் இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி நிதிஅமைச்சோ அல்லது ஏனைய அமைச்சுக்களோ மாகாணசபைகளின் விடய பரப்பிற்குறப்பட்ட துறைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்கமுடியாதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நிதி அமைச்சின் கண் காணிப்பின் கீழ் வெளிநாட்டு நிதி உதவிகளை நேரடியாக மாகாண சபைகளுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் யோசனை ஒனறு முன்வைக்கப்பட்டுள்ளது. (32)

# கட்சிக்குள் நிலவுகின்ற முரண்பாடுகளுக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும்

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தீர்மானம்

கட்சிக்குள் நிலவுகின்ற முரண்பாடுகளுக்கு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரியவருகிறது. இந்த வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டுள்ள பிரதான முரண்பாடுகளுக்கு தீர்வு காணும் விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத் தரப்பில் அமைச்சர்கள் மங்கள சமரவீர, சுசில் பிரேமஜயந்த, தினேஸ் குணவர்த்தன ஆகியோரும் மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் விமல் வீரவன்சவும் கலந்து கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தச் சந்திப்பில் அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளை அனுசரித்துச் செல்ல வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

# பழம் பெரும் துறைமுக நகர சுவடுகள் சுனாமியின் பின் கண்டுபிடிப்பு

இந்தியக் கடல் ஆய்வாளர்கள் பழம்பெரும் துறைமுக நகரம் ஒன்றின் சுவடுகளை கண்டுபிடித்துள்ளனர். சுனாமி கடல் அனர்த்தத்தின் பின் மேற்கொள்ளப்பட்ட ஆழ்கடல் ஆய்வுகளின்போது பழங்கால கற்சிலைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை பழம் பெரும் நகரமான மகாவலிபுரத்தில் அமைந்திருந்த ஆலயங்கள் பலவற்றின் சிலைகள் என கருதப்படுகின்றன. ஏழாம் நூற்றண்டு காலக்கட்டத்தில் முற்றிலும் கைகளாலேயே செதுக்கப்பட்டுள்ள இந்தச் சிலைகளை கடந்த பல வருடங்களாக தேடப்பட்டுவந்தாலும் கடல் கொந்தளிப்பின் பின் இவை தாமாகவே வெளிவந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் 110க்கும் மேற்பட்டோர் பலி!


பாக்தாக்கில் கில்லா மருத்துவ மனையின் முன் பொலிஸ்,தேசியப் படையினருக்கான ஆட்சேர்ப்பிற்கு உடற்பரிசோதனைக்குக் கூடியிருந்தவர்கள் மீது தற்கொலைக் கார்க்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் 110 பேர் கொல்லப்பட்டதுடன், 133பேர் காயமடைந்துமுள்ளனர். கில்லா மருத்துவ மனைக்கு முன்னால் இடம்பெற்ற இக்குண்டுத் தாக்குதலில் உடலின் சிதைந்த பகுதிகள், உடலுறுப்புகளினால் அவ்வைத்திய சாலையின் வெளிப்புறம் சூழப் பட்டுக் காணப்பட்டது. காய மடைந்தவர்கள் றக்வண்டிகளிலும், அம்பியூலன்ஸ்களிலும் ஏற்றி அண்மையிலுள்ள வைத்திய சாலைக்கு எடுத்துச் சொல்லப்பட்டனர்.

## உந்துருளி - ஈருருளி விபத்தில் ஓட்டுநர்கள் இருவரும் காயம்

(அலுவலக செய்தியாளர்)

உந்துருளி ஈருருளியுடன் மோதிக்கொண்டதில் உந்துருளி , ஈருருளி ஓட்டுநர்கள் இருவரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி சம்பவம் நேற்றுப் பிற்பகல் 5.00 மணியளவில் ஏ9 பிரதான வீதியின் பரவிப்பாஞ்சான் சந்திப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.



கிளிநொச்சி நகரப் பகுதியிலிருந்து கரடிப்போக்கு சந்தி நோக்கிப் பயணித்த உந்துருளி அதே பக்கமாக வீதியால் பயணித்துக் கொண்டிருந்த ஈருருளியுடன் மோதியதன் காரணமாக இருவரும் காயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மேற்படி விபத்துத் தொடர்பாக தமிழீழ காவல்துறை வீதி போக்குவரத்துப்பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ)

## மகளிர்...

ஒவ்வொரு வாகனத்தையும் சோதனை செய்த பின்னரே அனுமதிப்பார்கள். உந்துருளியில் அவர்களைக் கடந்து துப்பாக்கியுடன் பயணித்த ஒருவர் இத் துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்துவிட்டு மீண்டும் அவர்களது முன்னரணைக் கடந்தே தப்பிச் சென்றுள்ளார். எனவே, சிறிலங்கா இராணுவம் மற்றும் விசேட அதிரடிப் படையினருக்குத் தெரியாமல் இது நடந்திருக்க எந்த வாய்ப்பும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது காயமடைந்த மூன்று பெண்போராளிகளும் கல்முனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# திலீபன் மருத்துவ சேவை நிலையம் பன்சேனையில் திறந்து வைப்பு!

(அலுவலக செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட பன்சேனைக் கிராமத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையம் நேற்றுப் பகல் 11.00 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மட்டு,அம்பாறை மாவட்ட துணைத் தளபதி பிரபா ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை மட்டு.




அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பானு அவர்கள் ஏற்றி வைத்தார். தேசியக்கொடிக்கான மலர் வணக்கத்தினை வவுனியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி சண்முகநாதன் செலுத்தியதைத் தொடர்ந்து, தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை திலீபன் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் செ.நாயகன் அணிவித்தார். அடுத்து மருத்துவசேவை நிலையக் கட்டடத்தினை நலவாழ்வு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் என்.கே.ரத்தினம் அவர்கள் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். திலீபன் மருத்துவ சேவை நிலையத்தின் பெயர்ப் பலகையினை மட்டு.அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இளந்திரையன் திரை நீக்கம் செய்துவைத்தார். பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச,அரச சார்பற்றநிறுவன பிரதிநிதிகள், பொதுமக்களெனப் பெருமளவில் கலந்து கொண்டு நிகழ்வினைச் சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## உடுப்பிட்டி விபத்தில் வத்திராயன் வாசி பலி

(வடமராட்சி)

உடுப்பிட்டிப் பகுதியில் இடம் பெற்ற உந்துருளி- ஈருருளி விபத்தில் ஒருவர் பலியானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது. ஈருருளி யைச் செலுத்தி வந்தவரான மருதங்கேணி வத்திராயனைச் சேர்ந்த இளையப்பா சோமசுந்தரம் (வயது 76) என்பவரே பலியானவராவார்.

காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்திய சாலைக்கு அனுமதிக்கப்பட்ட போது இவர் மரணமாகியுள்ளார்.

## அறுதிப் பெரும்பான்மை எவருக்குமில்லை! பீகாரில் ஆட்சி அமைப்பதில் நெருக்கடி!

(பட்னா)

பீகாரில் எக் கூட்டணியும் அறுதிப்பெரும்பான்மை பெறாத நிலையில் யார் புதிய ஆட்சி அமைப்பது என்ற இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வெளியான தேர்தல் முடிவுகளின்படி பாரதிய ஜனதா -ஐக்கிய ஜனதா தளம் கூட்டணி 93 இடங்களும், ஐக்கிய ஜனதாத்தளம்,காங்கிரஸ்கூட்டணி 81 இடங்களையும் பெற்றுக் கொண்டுள்ளன. இந் நிலையில் ராம்விலாஸ் பஸ்வானில் லோக் ஜனசக்தி பெற்றுள்ள 28 இடங்கள் முக்கியத்துவம் மிக்கதாகவுள்ளது. பஸ்வான்யாருக்குமே ஆதரவு தெரிவிக்காத நிலையில் இழு பறி நிலை நீடிக்கிறது. அறுதிப் பெரும்பான்மைக்கு 122 இடங்கள் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி...

கடலுக்குச் செல்வோம். எனும் செயற்திட்டத்திற்கமைய மீன்பிடித் தொழிலையே மூலதனமாகக் கொண்டு வாழ்ந்துவந்த மக்களின் இழப்புக்களை நிவர்த்திசெய்து, தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும்பொருட்டு கடற்றொழில் உபகரணங்களை வழங்குதல், கடற்றொழில் உபகரணங்களை புதிதாகச் செய்து கொடுத்தல், திருத்தம் செய்து கொடுத்தல் போன்ற மீள் கட்டுமான புனரமைப்புச் செயற்பாடுகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கடல் சம்பந்தப்பட்ட பலதரப்பட்ட சேவை (MARINE MULTI SERVICE) நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப்பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டுவரும் இச் செயற்றிட்டத்தின்கீழ் நேற்றுக் காலை 10.30 மணியளவில் வடமராட்சி கிழக்கு நெல்லியான் என்னுமிடத்தில் படகு உற்பத்தி மையம் ஒன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப் பட்டது.

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப் பாளர் ராஜன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான . காதர் ஏற்றி வைக்க, தேசியக்கொடியினை கடற்புலிகளின் தளபதி . மங்களேஸ் ஏற்றிவைத்தார். இதனையடுத்து படகு உற்பத்தி மையத்தின் பெயர்ப்பலகையினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் திரைநீக்கம் செய்து வைக்க, படகு உற்பத்தி மையம் கடற்புலிகளின் “மங்கை படகுக் கட்டுமான” பகுதியின் பொறுப் பாளர் ஆனந்தி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இதையடுத்து கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் ஸ்ரனிஸ்ரோஸ் அவர்களின் ஆசியுரையுடன் சிறப்புரைகளும் இடம்பெற்றன.

அரசியல்துறைதுணைப் பொறுப் பாளர் சோ.தங்கன் அவர்கள் உட்பட கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலவன், யுனிசெப் யுஎன்எச்சிஆர் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழக நிகொட் திட்டப் பணிப்பாளர் சுடர், கிளி நொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்தினர். இந் நிகழ்வில் சுனாமிக்குப் பின்னரான துரித புனர் வாழ்வு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்புப் பணிப்பாளர்களில் ஒருவரான வின்சன் மற்றும் தமிழர்புனர்வாழ்வுக் கழக ஊடகப் பிரிவைச் சேர்ந்த. சதீஸ் மற்றும் போராளிகள், பொதுமக்கள் எனப் பெரும் பாலானோர் கலந்து கொண்டனர்.

இறுதியாக நன்றியுரையினை வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி இணைய இணைப்பாளர் சிவஞானம் அவர்கள் வழங்கியதையடுத்து நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

## பிரிட்..

யும் சந்தித்து உரையாடினார். அதனைத்தொடர்ந்து பாதிக்கப் பட்ட மக்கள் சார்பின் குழுவொன்றைச் சந்தித்து அளவளாவினார். இக் குழுவினர் பாதிப்புக்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பாக இளவரசர் சார்ள்சுக்கு விளக்கியதோடு நிவாரணப் பணிகளிலும் புனரமைப்புப் பணிகளிலும் ஏற்படுகின்ற தாமதங்கள் குறித்தும் தமது அதிருப்தியை எடுத்துக் கூறினர். பின்பு அங்கிருந்து மட்டிக்கழி, பாலமீன்மடு ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் அரசாங்க அதிபரிடம் மக்களுக்கான தற்காலிக மற்றும் நிரந்தரக் குடியிருப்பு வசதிகள் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டார். இவர் மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படும் வரை வெபர் விளையாட்டரங்கிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெளியார் எவரும் நடமாட அனுமதிக் கப்படவில்லை. நேற்று முன்தினம் மாலை முதல் மட்டக்களப்பு நகரிலும் இவர் பயணம் செய்யவிருந்த பாதைகளிலும், பிரதேசங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப் படுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக உள்ளூர் பத்திரிகையாளர்கள் கூட குறிப்பிட்ட இடங்களுக்குச்சென்று செய்தி சேகரிப்பதற்கு அனுமதிக்கப் படவில்லை. கொழும்பிலிருந்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் அனுப்பி வைக்கப்பட்டிருந்த செய்தியாளர்கள் மட்டுமே அங்கு காணப்பட்டனர். இது குறித்து மாவட்டப் பத்திரிகையாளர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

தனது மட்டக்களப்பு விஜயத்தை முடித்துக்கொண்டு காலை 10.45 இற்கு கொழும்பு திரும்பிய இவர், காலை 11.00 மணிக்கு சனாதிபதி மாளிகையில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், துணை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுமார் 40 நிமிடம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் பின்பு அங்கிருந்து உலங்குவானூர்தி மூலம் நேரடியாக விமான நிலையத்தைச் சென்றடைந்து அவுஸ்திரேலியா பயணமானார்.


## சாவு அறிவித்தல்



**தர்மசறோஜினி பஞ்சரட்ணம்**

பருத்தித்துறை பெண்கள் மெதடிஸ்த கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி தர்மசறோஜினி பஞ்சரட்ணம் (2ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை) கிளிநொச்சியில் 28.02.2005 திங்கட்கிழமை காலமாகி விட்டார். இவர் ஓய்வு பெற்ற தபால் அதிபர் பஞ்சரட்ணத்தின் மனைவியும், காயத்திரி, காலம்சென்ற நிமல் ஆகியோரின் தாயாருமாவார். கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்.
வே.கு.பஞ்சரட்ணம்,
(கணவர்)

(சி.11531)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது